திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 09 செப்-06

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

## மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

செப்-06

# தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு.ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |
| திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |

# கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 09
*செப்* 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | ரூ. |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.
பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்


இதழ்மணம் 711

நூல் மதிப்புரை 712
- முனைவர் க. சின்னப்பா

பாண்டித்துரைத் தேவர் நான்மணி மாலை 713
- பெரும்புலவர் இரா. இளங்குமரன்

திருமூலரின் சிந்தனைகள் - பரம்பொருள் 718
- ஆய்வாளர் கு. செயலட்சுமி

பொற்காப்பியம் அல்லது பொன்னூல்
- ஆய்வாளர் து. மூர்த்தி 726

சில்லுக்கருப்பட்டியும் இலக்கண விளக்க மரபும் 740
- முனைவர் இரா. கோதண்டராமன்

# இதழ்மணம்

இலக்கண ஆய்வும், இலக்கணம் குறித்த திறனாய்வும் அருகிவருகின்ற இன்றைய தமிழ் உலகில் முனைவர் ப.வேல்முருகன் எழுதியுள்ள எழுத்திலக்கண மாற்றம் என்னும் திறனாய்வு நூல் இந்த இதழில் மதிப்புரை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் சங்கம் வைத்துக் கட்டிக் காத்த பெருமையுடையவர் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்கள். அவர்களைக் குறித்து ஈழநாட்டு சிவசம்புப்புலவர் இயற்றிய பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலையின் கருத்துச்செறிவு குறித்தும் கவிநயம் குறித்தும் விளக்கி, பெரும்புலவர் இரா. இளங்குமரனார் எழுதிய பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை என்னும் கட்டுரை இந்த இதழைச் சிறப்புச் செய்கிறது.

சைவ தத்துவத்தைப் பத்தாம் திருமுறையில் அடக்கியுரைத்த சித்தராகிய திருமூலரின் சிந்தனையில் பரம்பொருள் என்பது ஒன்றே என்பதை அவர்தம் பாடல்கள் வாயிலாக ஆய்வாளர் ஜெயலட்சுமி தம் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

என்றும் இளமை மாறாமல் செம்மொழியாகத் திகழும் தமிழ்மொழி, காலவளர்ச்சிக்கேற்ப மொழிமரபின் இயல்பிலிருந்து மாறுபடாமல் பல்வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. அதனை நிறைவேற்றுவதாக அமைந்துள்ள இலக்கணி பொற்கோவின் இக்காலத் தமிழ் இலக்கணம் என்னும் நூல் அமைந்துள்ள தகைமையை ‘பொற்காப்பியம்’ அல்லது பொன்னூல் என்னும் கட்டுரையாக அறிஞர் து. மூர்த்தி வடித்துள்ளார்.

தாமரை மணாளனின் ‘சில்லுக்கருப்பு’ என்னும் தொடரில் அமைந்துள்ள இலக்கண மரபுகளை முனைவர் இரா. கோதண்டராமன் சிறந்த சான்றுகளுடன் ஆய்வு செய்துள்ளார்.

இலக்கண மணம் பரப்பும் இதழாகச் சிறப்புடன் வெளிவந்துள்ள இந்த இதழில் மேலும் மணத்தை ஊட்டும்விதமாகத் திரு. மு. குப்புசாமி எழுதியுள்ள செய்யுள் ஓவியமும் இடம்பெற்றுச் சிறக்கச் செய்துள்ளது.

# நூல் மதிப்புரை

நூல் : **எழுத்திலக்கண மாற்றம்**

விலை : ரூ.170 பக்கங்கள் : 220

ஆசிரியர் : முனைவர் **ப. வேல்முருகன்**

இலக்கியம் மக்களை நல்வழிப்படுத்தும், இலக்கணம் மொழியைக் கட்டிக்காக்கும். முனைவர் ப. வேல்முருகனின் 'எழுத்திலக்கண மாற்றம்' என்னும் நூல் அண்மையில் வெளிவந்துள்ள எழுத்திலக்கணம் பற்றிய தொகுப்பு நூல் ஆகும். இது எழுதிய ஆசிரியருக்கு இலக்கணத்தில் உள்ள ஈர்ப்பைக் காட்டுகிறது. அண்மைக் கால ஆய்வாளர்களுள் பெரும்பாலானோர் சங்க இலக்கியம், நாவல், சிறுகதை, கவிதை போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். ஆனால், ப. வேல்முருகன் அவர்கள் எழுத்திலக்கணம் பற்றிய நூல் வெளியிட்டிருப்பது பாராட்டிற்குரியதாகும்.

கடினமான ஓர் இலக்கணத் தொகுப்பை ஐந்து பகுதிகளாகப் பிரித்து எளிமையாக இந்நூல் விளக்குகிறது. எழுத்திலக்கணத்தை எண்ணிக்கை அடிப்படையில் குணவீர பண்டிதரும், பவணந்தியாரும் பிரித்திருப்பதையும், தொன்னூல் விளக்கம் மூன்றாகப் பிரித்திருப்பதையும் காட்டியுள்ளார். முத்துவீரியத்தில் உள்ள 'மொழியியலும்' நன்னூலில் உள்ள 'பதவியலும்' ஒன்று என்பதைப் பல்வேறு செய்திகளின் வாயிலாக நிரூபித்துள்ளார்.

எழுத்து என்பதற்கு இலக்கண நூலார்கள், உரையாசிரியர்கள் தரும் விளக்கம் மட்டுமின்றி மொழியியலார் தரும் விளக்கத்தைச் சான்றுகளுடன் தொகுத்துத் தந்தமை இவர் இலக்கணத்தில் மட்டுமின்றி மொழியியலிலும் புலமை பெற்றவர் என்பதை அறியச் செய்கின்றது.

முத்துவீரியத்தில் மட்டும் சார்பெழுத்துக்கள் இரண்டு (உயிர்மெய், ஆய்தம்) என்று கூறி குறுக்கவகை, அளபெடை வகை போன்றவற்றை முதல், சார்பு என்ற பிரிவில் அடக்காது கூறியுள்ளமை புதுமையான செய்தி.

எழுத்தொலிகளின் பிறப்பை எளிமையாக விளக்க படங்களைக் கையாண்டிருப்பது சிறப்பாகும். நன்னூலில் 'பதவியல்' என்ற பெயர் தோன்றக் காரணம் அக்காலத்தில் தோன்றிய வடமொழியின் செல்வாக்குதான் என இரண்டு இடங்களில் கூறியிருக்கின்றார். பதவியல் என்ற சொல்லுக்கு மொழியியலார் தரும் விளக்கம் சிறந்த முறையில் அமைந்துள்ளது.

அகநிலைப் புணர்ச்சிக்கும், புறநிலைப் புணர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு இந்நூலைக் கற்கும் அனைவருக்கும் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது.

புறநிலைப் புணர்ச்சி என்பது நன்னூலுக்குப் பின் தோன்றிய நூல்களில் அதிக முக்கியத்துவம் பெறாததை அட்டவணை வாயிலாகக் கூறுகின்றார். மேலும் புறநிலைப் புணர்ச்சியின் விளக்கமும் அதன் இன்றியமையாமைப் பற்றி மொழியியல் சான்றுகளுடன் கூறியுள்ளமை சிறப்பாகும். பின்னிணைப்பை நோக்கும்போது இந்நூலைச் சிறப்பாக உருவாக்கிய ஆசிரியரின் கடின உழைப்பு புலனாகிறது.

*-முனைவர் க. சின்னப்பா*

# பாண்டித்துரைத் தேவர் நான்மணி மாலை

பெரும்புலவர் இரா. இளங்குமரன்

ஈழநாட்டுப் பெரும்புலவர், சிவசம்புப் புலவர் என்பார். அவர் காலம் 1830–1909. பாற்கர சேதுபதியையும் பாண்டித்துரையாரையும் இருமுறை கண்டு பாடிப் பரவியவர். ஈழத்து இருப்பினும் ஆழ்ந்த பற்றொடு விளங்கியவர். தாம் வரஇயலா நிலையிலும் பல் கால் சீட்டுக் கவி விடுத்த சீர்த்தியர்.

யாழ்ப்பாணத்துப் பருத்தித் துறையைச் சார்ந்த உடுப்பிட்டியினர் இவர். இவர் தந்தையார் செல்வர் அருளம்பல முதலியார். நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடத்தும் நல்லூர்ச் சம்பந்தப் புலவரிடத்தும் தொல்காப்பியம் முதல் பல்காப்பியம் பயின்றவர். ஈழமண்டலத்தில் இவரொப்பச் சிற்றிலக்கியம் பாடினார் இலர் என்பர்.

இவரிடத்துக் கல்வி கற்றுச் சிறந்தார் மிகப் பலர். இவர் பாடல்பெற்ற பெருமக்களும், திருக்கோயில்களும் பலரும், பலவுமாம்.

பாற்கர சேதுபதியின் மேல் 'கல்லாடக் கலித்துறை'யும், பாற்கர சேதுபதி நான்மணி மாலையும் பாடியுள்ளார். தனிப்பாடல்களும் பாடியுள்ளார்.

பாண்டித்துரையார் மேல், 'பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலை' என்றொரு நூலும் யாத்துள்ளார்.

நான்மணிமாலை என்னும் சிற்றிலக்கியம் வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்னும் பாவகை நான்கும் ஈறுமுதலாக (அந்தாதியாக)ப் பதின்முறை வந்து நாற்பது பாடல்களில் முடிவதாகும்.

இந்நான்மணியில் முதற்கண் வரும் அகவற்பா வருமாறு:

*ஆம்பொருண் மெய்க்கலை ஆய்வது தினமே*
*ஏம்பலின் உதவுவ திரப்பவர்க் கனமே,*

*சார்வது சைவ சற்சன சங்கமே*
*ஏர்வளர் கவித்தொடைக் கீவது தங்கமே,*

*அகனுறச் செபிப்ப தைந்தக் கரமே*
*திகழ்தர வாழ்வது தேவைந கரமே;*
*என்று மேத்துவ திராமேச மூர்த்தமே*
*சென்று திளைப்பது சேதுவிற் றீர்த்தமே,*

*இனிதுற ஓம்புவ தில்லற முறையே*
*நனிமகிழ்ந் தாய்வது நற்றவ மறையே,*
*பாண்டித் துரையெனப் பலரும்*
*ஈண்டித் துதிக்க வீற் றிருக்குமிந் திரனே*

பன்னீரடியான் அமைந்த இவ்வகவற்பாவின் முதற் பத்து அடிகளின் இணை இணை அடிகள் ஐந்தன் இறுதியும் இயைபு என்னும் தொடைநலம் பெற்றுத் திகழ்கின்றமை காண்க.

இறுதிச் சீர்களின் முன்னெழுத்து ஒன்றுமே அளவொத்த வேறெழுத்தாம். அவ்வாறன்றி எல்லா எழுத்தும் அதுவாகவே அமைந்து பொருள்வேறு தந்திருந்தால் கடைமடக்கு என்னும் யாப்பு வகையைச் சாரும்.

<u>பொருள்</u> :

"*பாண்டித்.................. இந்திரனே*"

பாவலரும் புலமையரும் கலைவல்லாரும் ஆகிய பற்பலரும் கூடி வாழ்த்தி வணங்கத் திருவோலக்கம் கொண்டிருப்பவன், இந்திரனை ஒத்த பாண்டித்துரை என்னும் பெருமகனே.

"*ஆம் பொருள்.....................அனமே*"

பாண்டித்துரையாம் பெருமான் தான் தொடர்ந்து செய்யத் தக்கவற்றையும் மெய்ப்பொருள் கலையையும் தவறாமல் ஆய்வன்; அவன் வறுமையால் வந்து கேட்பவர்க்கும் தினந்தோறும் குறைவில்லாமல் வழங்குவது அன்னமேயாம்.
(ஆய்வது தினமே ... உதவுவது அனமே)

"*சார்வது ............................. தங்கமே*"

பாண்டித்துரை, சார்ந்திருப்பது. சைவசமயம் சார்ந்த பெருமக்களையே அவன் சிறப்பு வாய்ந்த பாடல் நூல்களுக்கு வழங்குவது பொற்கிழியே.

('*சார்வது சங்கமே, ஈவது தங்கமே*')

"*அகனுற ............................ நகரமே*"

பாண்டித்துரை, மனமார எண்ணி ஓதி இருப்பது இறைவன் ஐந்தெழுத்துகளாகிய 'சிவயநம' என்பதே. அவன், புகழ் விளங்க வாழ்ந்து வருவது இராமநாதபுரம் என்னும் நகரமே.

*"நமசிவய என்பது பெயர்;*

'சிவய நய' என்பது மந்திரம்" – என்பர். அகன் = மனம்; தேவை = இராமநாதபுரம், முகவை (ஐந்து அக்கரமே; தேவை நகரமே)

*"என்றும் ......................தீர்த்தமே"*

பாண்டித்துரை, நாள்தோறும் போற்றி வழிபாடு செய்வது இராமநாதர் திருவடிவமே. அவன், தவறாது போய் நீராடி இன்புறுவது சேதுவாகிய புனித நீர்த்துறையே.

(ஏத்துவது இராமேச மூர்த்தமே

திளைப்பது சேது தீர்த்தமே)

*"இனிதுற ..................... மறையே"*

பாண்டித்துரை, இனிமையாகப் பேணிவளர்ப்பது இல்லற நெறியையே ஆகும். அவன், மிகவிரும்பி ஆய்வது துறவற மெய்ப் பொருள் நூல்களையே ஆகும். இல்லற வாணரும் மெய்ப்பொருள் வல்லாராகத் திகழலாம் என்பது கூறியது இது.

(ஓம்புவது இல்லறமுறை; ஆய்வது தவமறை)

இவ்வகவலில் 'கரமே, கரமே' எனக் கடைமடக்குப் போல் வருவது, கடைமடக்கு அன்று. 'அக்கரமே, நகரமே' என்பவற்றின் பின்மூன்று எழுத்துகளே அவ்வாறு வந்தன ஆகலின் 'இயைபு' என்னும் தொடையே யாம்.

'இறுதி இயைபு' என்பது இயைபுத் தொடை இலக்கணம்.

*"தமிழனென்று சொல்லடா*
*தலை நிமிர்ந்து நில்லடா"*

*"செந்தமிழ் நாடென்னும் போதினிலே – இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே"*

என்பவற்றை நினைக.

பாண்டித்துரையார் நான்மணி மாலையின் இரண்டாம் அகவல்:

*இருந்தன மலையான், திருந்தருள் நிலையான்,*
*விருந்தரைப் பேணினான், அருந்தகைப் பூணினான்,*

*புதுவையம் பதியான், புதனிகர் மதியான்;*
*பதியிரா மேசன், துதியறா நேசன்;*
*பாவலர் அன்பன், மேவலர் வன்பன்;*
*தேவைநன் நாட்டான், நாவியன் மாட்டான்;*
*பொன்னுச்சாமி, என்னப் பூமி,*
*பன்னிய அறத்தான், பொன்னிய நிறத்தான்;*
*தந்தருள் பாலன், முந்துமெய்ச் சீலன்;*
*உரைசால் பாண்டித் துரைபேர்,*
*மருவிய திசையே, பரவிய திசையே.*

*"பொன்னுச்சாமி .................... பாண்டித்துரை பேர்"*

பொன்னுச்சாமி என்ன உலகோர் உவந்து சொல்லும் அறவாணனும், பொன்போலும் நிறத்தவனும் ஆகிய முகவை அமைச்சர் பெருமகன் தந்தருளிய மைந்தனும், பழமையான மெய்ப்பொருள்களையெல்லாம் தன்பால் கொண்ட பண்பாளனும், புகழ் நிரம்பியவனும் ஆகிய பாண்டித்துரையின் பெயர்,

*"மருவிய .................... திசையே"*

வாழ்வோர் உள்ளங்களிலெல்லாம் நிறைந்து எல்லாத் திசைகளிலும் பரவியது. (*"மருவியது இசையே, பரவிய திசையே"*)

*"இருந்தனம் .................... நிலையான்"*

கிடைத்தற்கு அரிய பெருஞ்செல்வ மலை போன்றவன்; செந்தண்மையாம் அருள் நிலையமாகவும் விளங்குபவன்.

(*"இரும் தன மலையான்; திருந்து அருள் நிலையான்"*)

*"விருந்தரைப் .................... பூணினான்"*

தன்னை நாடிவந்த விருந்தினரையெல்லாம் தன்னினும் மேலாகப் பேணினான்; உயர்ந்த பண்புகளை யெல்லாம் அணிகலமாக அணிந்தான்.

*"விருந்தரைப் பேணினான்; அரும் தகை பூணினான்*
*புதுவையம் பதியான், புதனிகர் மதியான்"*

புதிதுண்டாக்கப்பட்ட பாலவநத்தம் என்னும் புகலூரைத் தன் ஊராக உடையவன்; அறிவன் என்று சொல்லப்படும் புதனுக்கு ஒப்பான அறிவொளி உடையவன்.

*"புதுமை அம் பதியான்;*
*புதன் நிகர் மதியான்"*

*"பதியிரா* .................... *நேசன்"*

உளம் கொண்ட இராமநாத ஈசுவரனாம் இறைவனை வழிபடுதல் நீங்காத அன்பினன்; *"பதி இராமேசன், துதி அறா நேசன்"*

*"பாவலர்* .................... *வன்பன்"*

பாடிவந்தார் ஆகிய பாவலர் தமக்கெல்லாம் பேரன்பினன்; தன்னைப் பணிந்து நில்லாப் பகைவருக்கெல்லாம் வன்பகையனானவன்.

மேவலர் = பகைவர்; தன்னை அடையாதவர்

(பாவலர் அன்பன், மேவலர் வன்பன்)

*"தேவை* .................... *காட்டான்"*

இராமநாதபுரம் எனப்படும் நல்ல நாட்டிற்கு உரிமையாளன்; நாவினால் சொல்லிய சொல்லை மாற்றி மொழியாதவன்.

(தேவை நல்ல நாட்டான்; நாவு இயன் மாட்டான்.)

—இவ்வனைத்தும் உடையவன் பாண்டித்துரை என்க.

இவ்வனைத்தும் உடையவனாகிய பொன்னுச்சாமியின் மைந்தன் பாண்டித்துரை என இருவருக்கும் பொருந்திவரவும் இவ் அகவலைப் பாடினார் எனலுமாம்.

*அடிதோறும் இரண்டாம் சீரும் நான்காம்*
*சீரும் இயைபுத் தொடையும்,*
*முதற்சீரும் மூன்றாம் சீரும் எதுகைத்*
*தொடையும், பெற்று வந்தமை அறிக.*
*அடியெதுகை வந்தமையும் காண்க.*

# திருமூலரின் சிந்தனைகள் - பரம்பொருள்

கு. செயலட்சுமி, எம்.ஏ. பி.எட்., எம்.பில்,
ஆய்வாளர் (யோகா)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை – 1.

மனித வாழ்க்கைக்கு நல்லொழுக்கம், நல்ல சமயநெறி, மெய்ப்பொருள் உணர்தல் மிக மிக அவசியம். இத்தகைய நெறியில் நின்றோர் சான்றோனாகப் போற்றப்படுகிறான். வாழ்வதற்குரிய ஒழுக்கங்களை வலியுறுத்தியும், நல்ல சமய நெறிப்பாட்டை வரையறுத்தும், சமயத்தில் உள்ளடங்கிய மெய்ப்பொருள் கூறுகளைத் தெளிவுறுத்தியும் அமைந்துள்ள ஓர் ஞான நூல் திருமந்திரம் ஆகும். இது சைவத் திருமுறைகளில் 10–வது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நல்லுணர்வு மிக்கவர் இதனாசிரியர் திருமூலர். கற்பவர்களுக்கு எளிதாயும், உணர்வார்க்கு அரிதாயும், ஒழுகுவார்க்கு இன்பத்தையும் ஊட்டுவதாகவும் திருமந்திரம் அமைந்தது என்பர். திருமூலரின் சிந்தனையில் "பரம்பொருள் ஒன்றே" என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்ப வடிவினனான சிவனின் வழிபாடு பற்றிக் கூறும் தமிழாகம நூலான திருமந்திர முதல் பாடலில்,

*"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்*
*நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தன் ஐந்து*
*வென்றான் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்*
*சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே"*

என்று பரம்பொருளை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசையாக எட்டு வரை தொடர்புபடுத்திக் காட்டுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலானவன் பரம்பொருள். அவனுக்கு ஒப்பு இவ்வுலகில் எவரும் இலர். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதற்கிணங்க "ஒப்பில்லாத இறைவனை ஒன்றவன் தானே" என்கிறார் திருமூலர்.

பரம்பொருள் "அருட்பெரும் ஜோதி" வடிவாய் இருக்கின்றான். அந்த ஒப்பற்ற ஜோதி வடிவினன், உயிர்களாகிய நாம் அறியாமை என்ற இருளில் கட்டுண்டு துன்பம் அடைவதைக் கண்டு, இனிய சத்தியுடன் கலந்து அருள் சுரக்கிறான். நமக்கு உதவிக்கரம் நீட்ட தன்னிலிருந்து பிரிந்து அருள் சுரக்கின்றான்.

இதை,

"*தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு*
*முன்சுரக்கும் இன்னருள்*"

திருவெம்பாவையில் மணிவாசகர் – மாணிக்கவாசகர் பாடுகிறார்.

இங்ஙனம் ஒன்று இரண்டாயிற்று. அந்த இரண்டாவது வேறு ஒன்றும் இல்லை. இதை விளக்கி "இரண்டவன் இன்னருள்" என்று பாடினார் திருமூலர்.

ஒரு பொருளான சிவபெருமானே இனிய சக்தியுடன் இரண்டாய் உள்ளவன்; நான்முகன், திருமால், உருத்திரன் என்ற மூன்று நிலைகளில் நிற்பவன்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் உணர்ந்தவன்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் வென்றவன்; எழுத்து, சொல், மந்திரம், கலை, தத்துவம், உலகம் ஆகிய ஆறு ஆதாரங்களில் விரிந்தவன்; மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, சகசிரதளத்தில் விளங்குபவன்; நிலம், நீர், காற்று, தீ, வான், கதிரவன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுப் பொருள்களையும் உணர்ந்து அவற்றில் கலந்து விளங்குபவன். இத்தகைய பரம்பொருளின் குணம் பற்றிக் கூறும்பொழுது, மூன்றினுள் நின்றனன் என்கிறார்.

எந்தப் பொருளுக்கும் குணங்கள், தன்மைகள் உண்டு. குணங்கள், தன்மைகள் இல்லாத பொருள் ஒன்றும் உலகத்தில் இல்லை. ஒப்பற்ற ஒன்றான பரம்பொருளுக்கும் குணம் உண்டு. ஆனால், 'இறைவன் நிர்குணன்' என்று சொல்லப்பட்டிருப்பதைப் பற்றி ஆய்வோமானால், இறைவன் அறிவுப்பொருள்; அதிலும் பேரறிவுப் பரம்பொருள். அறிவுப்பொருள் தானே இயங்கும்; தள்ளிவிட்டால் எதிர்த்து நிற்கும்; நிறுத்தினால் தள்ளிவிட்டு ஓடும்.

ஆனால் சடப்பொருளான ஒன்றுக்கு சத்துவ, ராஜச, தமோ என்ற குணங்கள் உண்டு. சடப்பொருளானது தானே இயங்காது. சடப்பொருள் ஓரிடத்தில் இருக்கும்போது வெளியிலிருந்து வேறு ஏதாவது ஒரு சக்தி தள்ளிவிடவில்லை என்றால் அது அப்படியே அந்த இடத்தில் நிற்கும். இது சத்துவநிலை. வெளியிலிருந்து சடப்பொருளை எந்த சக்தியாவது தள்ளிவிட்டால் அது ஓடும். இது ராஜசநிலை. வெளியிலிருந்து ஏதாவது எதிர்சக்தி ஓடிக் கொண்டிருக்கும் சடப்பொருளைத் தடுக்குமானால் அந்த சடப்பொருள் ஓடுவதிலிருந்து நின்றுவிடும். இது தமோ குணநிலை. சடப்பொருள் தானே இயங்கும். இயக்கம் இல்லாததால்

வெளிச்சக்திகளின் தாக்கத்திற்கேற்ப 'இருத்தல், இயங்கல், நிற்றல்' என்ற மூன்று குணங்களையும் படைத்து நிற்கும். ஆகவே இறைவனைச் சடப்பொருளின் மூன்று குணங்களும் இல்லாதவன் என்ற பொருளில் 'நிர்குணன்' என்றனர். எந்தப் பொருளுக்கும் இயல்பான குணம் ஒன்று நிச்சயம் இருக்கும். பரம்பொருளை அப்படி நாம் பார்த்தோம் என்றால் 1. அறிவே வடிவாய் இருத்தல். 2. உயிர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கருணையை விழைவாகக் கொள்ளல். 3. தானே இயங்கிச் செயல்படுதல் என்ற மூன்று குணங்களில் நிற்கின்றான் என்பதையே மூன்றினுள் நின்றனன் என்கின்றார்.

பரம்பொருள் 'அறிவுப் பொருள்' என்பதனைக் கொண்டு எட்டாம் தந்திரத்தில் 'அறிவுதயம்' என்ற தலைப்பில்,

"*அறிவு வடிவு என்றறியாத என்னை*
*அறிவு வடிவு என்று அருள் செய்தான் நந்தி*' என்று பாடுகின்றார் திருமூலர்.

அவர் நம்மை உய்விக்க வேண்டும் என்ற கருணையில் இச்சை கொண்டு, இந்த உலகத்தையும், உலகப் பொருள்களையும் வைக்கின்றான். இறைவன் நம்மை உய்விக்க இச்சை கொண்டான். அதைச் செயல்படுத்தவே இந்த உலகத்தைப் படைத்து, காத்து, ஒடுக்கி, மறைந்து இறுதியில் அருளுவதாகிய ஐந்தொழிலையும் செய்கின்றான். அதாவது, இறைவன் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று குணங்களை உடையவனாகிறான் என்கிறார் திருமூலர். இதைத் தான் குமர குருபரரும்,

"*ஆகவரும் இச்சை, அறிவு, இயற்றலால் இலய*
*போக அதிகாரப் பொருளாகி*' என்று கந்தர் கலவெண்பாவில் பாடியுள்ளார்.

இறைவனானவன் பேரறிவுப் பரம்பொருள், உயிர்களாகிய நாம் சிற்றறிவுச் சிறுபொருள். எனவே அறிவுப் பொருள் என்கின்ற வகையிலே நமக்கும் அறிவு, இச்சை, செயல் என்கின்ற மூன்று குண இயல்புகள் பெயரளவில் இருக்க, இறைவனிடம் பேரளவில் உள்ளது என்பதே திருமூலரின் நுண்ணிய கருத்தாக உள்ளது என்பதை அறிகிறோம்.

ஒன்றான பரம்பொருள் நம் பொருட்டு அருள் சுரக்க, தானும் அருளுமாக இரண்டாக நிற்க, அறிவுப் பொருளுக்கு உரிய இயல்பான அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று குணங்களில்

நின்றது என்பதைக் குறிக்க, 'நின்றனன் மூன்றினுள்' என்று பாடி, கருத்துக்களை ஒன்றுக்கொன்று தொடர்பாக இயைபு படுத்தி வரிசையாய்ப் பூட்டிப் பாடியிருப்பது போற்றத்தக்கதாய் உள்ளது.

அடுத்து, பரம்பொருள் நான்கு உணர்ந்தான் எனும் போது 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்ற நன்னெறி நான்கினால் மட்டுமே உணரப்படுவான் என்கிறார். இங்கே திருமூலர் உணரப்படுவார் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியது, 'உணர்வு' என்பது மெய்யுணர்வைக் குறிப்பதாக உள்ளது. அறிதல் என்பது ஐம்புலன்களினால் வரும் அறிவைக் குறிக்கும். அறியப்படுவான் என்ற சொல்லைத் திருமூலர் பயன்படுத்தவில்லை. இறைவன் அறிவாராய்ச்சிக்கு அகப்படான். எனவே மிக எச்சரிக்கையாக உணர்தல் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். மேலும் அறம், பொருள், இன்பம், வீடு என்கிற பண்டைய நான்மறையான தமிழ் வேதம் நான்கையும் இங்கே ஏற்கத்தக்கது என்கிறார். அவர் வடமொழி வேதத்தைச் சுட்டவில்லை. ஏனெனில் திருமூலர்,

'*நந்தி அருளாலே சதாசிவன் ஆனவன்*' என்றும்,

"சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்" என்று சதாசிவ தத்துவம் முழுவதும் முத்தமிழ் வேதமாக மணந்தது என்று கூறியதாலும் அவர் கருத்துக்கு ஏற்ப, தமிழ் வேதம், என்று சொல்வதே சிறப்பானது. இதையே,

'*மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி*'

என்று நாவுக்கரசரும் போற்றித் திருத்தாண்டகத்தில் பரம்பொருள் பற்றி குறிப்பிடுகின்றார்.

அடுத்து, 'ஐந்து வென்றான்' எனும்போது, ஐம்புலன்களை வென்றனன் என்று பொருள் கொள்ளலாகாது. ஏனெனில் இறைவனோ கருவிகளின் துணையை வேண்டாத பேரறிவு உடையவன். மனித உயிர்களாகிய நமக்குத் தான் 'கருவிகள்' என்ற ஐம்புலன்கள் வேண்டும். இக் கருவிகள் துணைக் கொண்டே உலகப் பொருள்கள் அனைத்தையும் சுட்டிக் காட்டி ஒவ்வொன்றாக அறிகிறோம். எனவே 'ஐந்து வென்றனன்' என்பது படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என்பனவாகும் என்கிறார்.

இவ்வைந்து தொழில்களையும் வெற்றியாக நடத்துவதற்கு வன்னம், பதம், மந்திரம், கலை, தத்துவம், புவனம் எனும் ஆறு வழிகளைக் கையாளுகிறோம். இவற்றை வடமொழியில் ஷடத்துவா

என்று கூறுவர். 'அத்துவா' என்றால் 'வழி' என்று பொருள். 'ஷட்' சொல், என்ற தாது ஆறு என்ற எண்ணைக் குறிக்கும். எனவே, ஷடத்துவா என்றால் ஆறு வழிகள் என்று பொருள். வன்னம், பதம், மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்ற இந்த ஆறு வழிகளை எழுத்து, சொல், மந்திரம், கலை, தத்துவம், உலகம் என்று தமிழில் கூறலாம்.

உயிர்களான அறிவுப் பொருள்களுக்கு அறிவு விளங்க இறைவன் முதலில் எழுத்துக்களைப் படைக்கிறான். எழுத்துக்களின் கூட்டமான சொல்லைப் படைத்து பின் அதற்குரிய பொருளைப் படைக்கின்றான். இதனால் தான் தொல்காப்பியர் கூட,

"*எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே*" என்று நூற்பா செய்கிறார்.

சொல்லுக்கும் அது குறிக்கின்ற பொருளுக்கும் உள்ள தொடர்பை முழுமையாக, சரியாகப் பயன்படுத்துபவர்கள் அருளாளர்கள். எனவே அவர்கள் சொல் பலிக்கிறது. சொல்லின் முழுபலத்தால் தொடர்பு கொள்ளும்போது அதை மந்திரம் என்றனர். அந்த வாக்கு மந்திர வாக்கு. மந்திர வாக்கு முழு பலத்துடன் கூடிய சொல். ஆதலால் அதனை நிறைமொழி என்றனர். அருளாளர் வாக்குகள் எல்லாம் நிறைமொழி. அவர் வாக்கு மந்திரம். இதைத் தொல்காப்பியரே,

"*நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப*" எனக் கூறுகிறார்.

எனவே இறைவன் முதலில் எழுத்துக்களையும், எழுத்துக்களாலான சொல்லையும், சொல்லில் வலுமிக்க மந்திரத்தையும் படைக்கின்றான். இவை மூன்றும் சொல்லுலகம் எனப்படும். பின்னர் இவற்றிற்குத் தொடர்பான கலை, தத்துவம், உலகம் என்ற பொருள்உலகத்தைப் படைக்கின்றான்.

கலை என்பது அறியாமையாகிய இருளைப் போக்கிப் பொருள்களைப் புரிய வைக்கும் ஒரு கருவி. இதை நமக்கு உடம்பில் ஒன்றாய் படைத்து அறியாமையை நீக்குகிறான். உடம்பில் இந்த கலை என்ற கருவிக்கு உதவி செய்ய 35 தத்துவங்களையும் 60 தாத்துவீகங்களையும் படைத்து அவற்றின் மொத்த பிசைவை உடம்பாகத் தருகிறான். இந்த உடம்பினால் அனுபவித்து உண்மைகளை அறிய இந்த உலகத்தைப் படைக்கிறான்.

இவ்வாறாக எழுத்து, சொல், மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்ற ஆறு அமைப்புகளின் வழியாக நமக்கு அறிவு கொளுத்தி, அறியாமை இருளை அகற்றி தன்னோடு இரண்டறக் கலக்கச் செய்து பேரா, அழியா இயற்கைப் பேரின்பத்தை நமக்கு நல்குகிறான். இதனைக் கருத்தில் கொண்டே 'ஆறு விரிந்தனன்' என்று பாடினார்.

நாம் உய்வதற்கு ஆறு வழிகளைக் கையாண்டார் இறைவன். அதில் நமக்குக் கிடைப்பது இந்த உடல். இந்த உடலில் புகுந்து இறைவன் நம்மை ஒளியேற்றி உய்விப்பதற்காக, ஒளியாக உள்ளே புகுந்து, உடலின் ஆதாரமாகிய சுழிமுனை நாடியில் ஆறு ஆதாரங்களைத் தமது ஒளியால் மலர்த்தி, உயிராகிய ஆன்மாவை மேலேற்றி, இறுதியில் உடலுக்கு மேலே தலையோட்டின் துளையாகிய "பிரமரந்திரன்" என்பதைத் திறந்து அதன் மேல் மலரும் ஏழாவது ஆதாரமாகிய 'சகஸ்ராராம்' என்கிற 1008 இதழ் மலரை மலர்த்தி ஆட்கொள்வான்.

'இம்பர்' என்ற சொல்லுக்கு 'உலகம்' என்று தமிழகராதி பொருள் கூறும். அது போல 'உம்பர்' என்பது அப்பால் அல்லது காணாத இடம் என்பது பொருள் பெறும். இங்கே உடலுக்குள்ளே உள்ள ஆதார இடங்களைக் குறித்ததால் உம்பர் என்றார். ஏழு ஆதாரங்களாவன; 1. மூலாதாரம் 2. சுவாதிட்டானம் 3 மணிபூரகம் 4. அநாகதம் 5. விசுத்தி 6. ஆஞ்ஞை 7. சகஸ்ராராம்.

ஏழாவது ஆதாரமான சகஸ்ராராமத்தில் சிவன் செறிவதைத் தான் சிவனடி என்று கூறினர். இதைத் தான்,

"*சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவனடிக் கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து*' என்று மணிவாசகர் பாடினார்.

இதையே "*ஏழும்பர் சென்றான்*" என்ற பாடலில் பாடினார் திருமூலர்.

அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று குணங்கள் நிரம்பிய நம்மை உய்விக்க வேண்டிப் பேரருள் கொள்கிறான். இந்தப் பேருளினைச் செயல்படுத்த உயிர்கள் அவனிடம் அன்பு செய்யும் பொருட்டு, வரம்பில் இன்பமுடையவனாய் உள்ளான். எனவே இச்சை என்ற குண இயல்பிலே பேருருளுடைமை என்பதும் வரம்பில் இன்பம் உடைமை என்பதும் அடக்கம். பின்பு இதைச் செயல்படுத்த ஆற்றல் தேவையாக உள்ளது. இதற்கு முதலில் அவன்

வரம்பிலாற்றல் உடையவனாய் இருத்தல் வேண்டும். அதாவது *தன்வயத்தினால் இருத்தல் வேண்டும்.* அது மட்டுமல்ல பேரருளைச் செயல்படுத்த, அதுவும் எல்லைக்குட்பட்ட உயிர்களுக்கு உதவ, அவ்வவற்றின் எல்லைக்கேற்ப தொழிற்படுத்த உடம்பெடுக்க வேண்டும், நம் உடம்போ பல அழுக்குகளையும், ஆபாசங்களையும் கொண்டு நமக்கு ஒரு சிறையாக இருக்கிறது. அதுபோல அவன் எடுக்கும் உடம்பு இருக்கக் கூடாது. அவன் தூய உடம்பினாய் இருத்தல் வேண்டும். அந்தத் தூய உடம்பு அவனைச் சிறைப்படுத்துவதாக இருக்கக் கூடாது. அது இயற்கையாகவே சிறைப்படுத்தும் பாசத்திலிருந்து நீங்கி நிற்றல் வேண்டும். எனவே செயலாற்றல் என்ற இயல்பில், வரம்பிலாற்றலுடைமை, தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையிலேயே பாசங்களினின்று நீங்கி நிற்றல் என்பவை அடங்கும்.

அடுத்து இதையெல்லாம் செயல்படுத்த அறிவு என்பது வேண்டும். அவன் கடவுள் என்பதால் அந்த அறிவு எல்லைக்குட்படாத எல்லாம் அறிந்த முற்றறிவாக உள்ளது. மேலும் அவ்வறிவு இயற்கையாக, தானே உணரும் அறிவாக இருக்கிறது. எனவே அறிவு என்ற குணஇயல்பில், இயற்கை உணர்வினனாதல், முற்றறிவு உடையவன் என்கிறார்.

ஆக, பரம்பொருளைப் பற்றிக் கூறுகையில்,

| | | |
|---|---|---|
| அறிவு– | (1) | இயற்கை உணர்வினனாதல் |
| | (2) | முற்றறிவுடைமை |
| இச்சை– | (3) | பேரருளுடைமை |
| | (4) | வரம்பிலின்பம் உடைமை |
| செயல்– | (5) | வரம்பிலாற்றல் உடைமை |
| | (6) | தன் வயத்தனாதல் |
| | (7) | தூய உடம்பினனாதல் |
| | (8) | இயற்கையிலேயே பாசங்களிலிருந்து |

நீங்குதல் என எண்குணத்தானாக இருக்கின்றார் என்கிறார். அதனால் தான்,

> "*கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
> *தாளை வணங்காத் தலை*" என்று வள்ளுவரும்,

"*எட்டுவான் குணத்தீசர்*" என்று அப்பரும், "*குருபுங்கவ எண்குண பஞ்சரனே*" என்று அருணகிரியாரும் பாடியுள்ளார்கள்.

இறைவனின் மூன்று குணங்களே உயிர்களுக்கு உதவும் வகையில் எட்டு குணங்களாக உணரும்படி தானிருந்தான் என்று திருமந்திர முதல் பாடலின் இறுதிப் பகுதியில் '*தானிருந்தான் உணர்ந்து எட்டே*' என்று பாடுகிறார் திருமூலர்.

மற்றொரு பொருளால் இதைச் சுட்ட வேண்டும் என்றால், இறைவன் நமக்கு அறிவு கொளுத்துவதற்காகப் பொருள் உலகைப் படைத்து, உள்ளிலிருந்து இயக்குகிறான். பொருள்களை சடப்பொருள், அறிவுப்பொருள் என இரண்டாகப் பிரிக்கலாம். சடப்பொருளே நாம் கண் எதிரே பார்க்கின்ற பிரபஞ்சம். இந்த பிரபஞ்சம் வானம், நிலம், நீர், காற்று, தீ என்பனவாகும். இந்த பிரபஞ்சத்தில் ஒளிர் பொருள்களாகப் பகலொளியாகச் சூரியனையும், இரவொளியாகச் சந்திரனையும் வைத்திருக்கிறான். அறிவுப் பொருளான உயிராகிய நம்மையும், சடப்பொருளையும் உள்ளிருந்து இயக்குகிறான்.

இறைவன் வான், காற்று, தீ, நீர், நிலம், சூரியன், சந்திரன், இயமானன் ஆகிய உயிர் என்ற எட்டிலும் சேர்ந்து நிற்கின்றான். இந்த நிலைக்குத்தான் 'அட்ட மூர்த்தம்' என்று பெயர். இந்த அட்ட மூர்த்தத்தை வணங்காத அருளாளர் இல்லை. இவ்வாறு "தான் எட்டாய் இருந்தான் உணர்ந்தே" என்று திருமூலர் பாடுகின்றார்.

ஒப்பற்ற பரம்பொருளின் தன்மை, குணம், இயல்பு, அவர் செய்யும் காரியங்களைக் கூறி, தான் பரம்பொருளிடம் பெற்ற இன்பத்தை உலகில் உள்ள அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்ற நல்லுணர்வால் யாத்த ஞான நூலாகிய திருமந்திரத்தை நாமும் கற்று, "பரம்பொருளோடு நினைவில் ஒன்றுபடுவோம்". இறை நினைவு என்பதே யோகம். அந்த நினைவு உள்ளத்திலிருந்து எழ வேண்டும். உள்ளன்பு வேண்டும். உலகாய வாழ்க்கையில், ஒருவரிடம் அன்பு எழ வேண்டும் என்றால், அவரைப் பற்றிய முழு அறிமுகம் வேண்டும். அப்போதுதான் மாசில்லாத அன்பு ஏற்படும். பரம்பொருளைச் சிந்தையில் வைத்து, அன்பால் அவருடன் ஒன்றி, திருமூலரின் சிந்தனையுடன் நாமும் கலந்து, வளமான வாழ்க்கை வாழ்வோமாக!.

குறிப்பு :

"மு.பெ. சத்தியவேல் முருகனாரின், "திருமந்திரம் – ஓர் அறிமுகம்" என்ற நூலை அடியொற்றி இக்கட்டுரை எழுதப்பட்டது.

# பொற்காப்பியம் அல்லது பொன்னூல்

அறிஞர் து. மூர்த்தி
வார்சா பல்கலைக்கழகம், போலந்து

தமிழ் இலக்கண வரலாற்றில் எத்தனையோ மைல்கற்கள் உள்ளன. ஒவ்வொரு இலக்கணப் பெரும்பனுவலும் அதனதன் காலத் தோற்றத்திற்கும் வாழ்வியல் மற்றும் கல்வியியல் தேவைகளுக்கும் ஏற்ப பெருமையும் வாழ்வும் பெற்றதாகும். தமிழ் மொழியின் அமைப்பை விளக்கும் திறத்தாலும், இக்கால மொழி இயல்புகளையும் புரிந்துகொள்ளப் பயன்படும் நுட்பத்தாலும் தொல்காப்பியமும் நன்னூலும் இன்றும் தமிழ்க் கல்வி உலகில் பெரிதும் போற்றப்படுவன. நன்னூலைத் தொடர்ந்து பல இலக்கண நூல்கள் தோன்றி, தமிழ்மொழி அமைப்பின் புதிய வளர்ச்சிகள் சிலவற்றைக் குறிப்பிட்டிருந்தாலும் மொழிவிளக்கு நிலையில் தொல்காப்பியமும் நன்னூலுமே இன்றும் முழுமை பெற்ற இலக்கணப் படைப்புகளாக உள்ளன. ஆனால் தமிழ்மொழி இன்று அடைந்திருக்கும் வளர்ச்சிநிலை, பல்வேறு புதிய இலக்கணக் கூறுகளுக்கு வழியமைத்திருக்கிறது. குறிப்பாக இக்காலத் தமிழ்மொழியின் இயங்குபரப்பு, இலக்கியக் கல்வி என்பதற்கு அப்பால், பயிற்றுமொழி, ஊடக மொழி, கணினி மொழி, மக்கள் தொடர்புமொழி எனப் பல தளங்களைப் பெற்றுள்ளது. எனவே மரபின் வேர்களில் இருந்து கிளைத்து பெரிதும் சிறிதுமாய்ப் பல்வேறு கிளைகளாய் விரிந்து, விழுதுகளும் வேர்களாகி வளர்ந்து நிற்கும் இக்காலத் தமிழுக்குப் புதிய இலக்கணம் தேவைப்படுகிறது.

> “நமக்கு முன் வாழ்ந்த இலக்கணப்புலவர்கள் வழங்கிய கருவிகளைக் கொண்டு இன்று வளர்ந்துள்ள மொழியியல் கோட்பாடுகளையும் பயன்படுத்திக் கொண்டு இன்றுள்ள மொழிச் சூழலையும் இலக்கியச் சூழலையும் புரிந்துகொண்டு இன்றைய சூழலில் நமக்குப் பயன்படத்தக்க வகையில் தமிழ் மரபுக்கு ஏற்ப ஓர் ஆற்றல் வாய்ந்த இலக்கணத்தை நாம் உருவாக்க வேண்டியுள்ளது” (பொற்கோ 1994:148)

எனக் குறிப்பிட்டிருந்த பேராசிரியர் பொன். கோதண்டராமன் (பொற்கோ), அவரே தொடர்ந்து கூறியுள்ளவாறு ‘இந்தப் பணியின் தேவையையும் அருமைப்பாட்டையும்’ நன்றாகப் புரிந்துகொண்டு ‘அத்தகைய பணியை அவரே செம்மையாகவும் விரைவாகவும்’ நிறைவேற்றித் தந்துள்ளார். மரபிலக்கண இலக்கிய அறிவும் மொழியியல் கோட்பாட்டு நுட்பங்களும், நீண்ட கல்வி வாழ்வும்

வாய்க்கப் பெற்ற பொற்கோவின் பெரும்படைப்பாக, "இக்காலத் தமிழ் இலக்கணம்" (2002, பூம்பொழில் வெளியீடு, சென்னை 600020) திகழ்கின்றது.

தொல்காப்பியம் தொடங்கி இன்று வரையிலான தமிழ் இலக்கண வளர்ச்சி மரபிற்குள் இந்நூலை வைத்து நோக்கும் புலமையர்க்கும், தமிழ்படிக்கத் தொடங்கும் தொடக்க நிலையர்க்கும் ஒரு சேரப் பயன்படும் பெருமையளிக்கும் நூலாக 'இக்காலத் தமிழ் இலக்கணம்' விளங்குகிறது.

தமிழ்க் கல்வி உலகில் 'மொழியியல்' என்ற 'மொழிஅறிவியல்' மொழியின் நுட்பங்களை உலகுக்கு வெளிப்படுத்தும் ஒளிவிளக்காய் நுழைந்தது; நிறுவனங்களில் பயிலப்பெறும் கல்வியாக வளர்ந்தது. இந்த மொழியியலாளர் மரபில் இரண்டு நிலைகள் தோன்றின: 1) தமிழ் இலக்கண, இலக்கிய, மொழி, வரலாற்று, சமூக மரபுகளை நுட்பமாகத் தெளிந்தோரின் மொழியியல் புலமை, 2) மொழியியலை வெறும் ஒரு கல்விப்பிரிவாக மட்டும் படித்தவர் நிலைமை. இந்த இருசாராருள் முதல் மரபினரே தமிழ் இலக்கணத்திற்கும், மொழியறிவு வளர்ச்சிக்கும், இலக்கிய அறிவு நுட்பங்களுக்கும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர். பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரன் தொடங்கிய இம்மரபில் பொற்கோ தலைமாணாக்கராகத் திகழ்கின்றார். அவரால் படைக்கப்பெற்றுள்ள 'இக்காலத் தமிழ் இலக்கணம்' என்ற பெருநூலை, இலக்கணத் தமிழாய்வு உலகில் இடம்பெற, தடம்பதிக்க விழையும் இளைய ஆராய்ச்சியாளர்க்கு இக்கட்டுரை அறிமுகப்படுத்த முயலுகிறது.

## II

இந்நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி, ஒலியனியல், சொல்லியல், சந்தி, தொடரியல் ஆகியன பற்றி விரிவாக விளக்குகிறது. இலக்கண மரபை, வளர்ச்சியை, புதிய வரவுகளை நெறிப்படுத்துகிறது. 'நோக்கியல் பகுதி' என்னும் இரண்டாம் பகுதி, தமிழில் அண்மைக் காலத்தில் தோன்றியுள்ள அனைத்து மொழிக்கூறுகளையும் வகைதொகைப்படுத்தி இலக்கண நெறிசுட்ட முயல்கிறது. ஒரு செம்மொழியின் வளர்ச்சியில், இன்றும் பேச்சுமொழியாக இருக்கும் தமிழில் தோன்றியுள்ள புதிய புதிய இலக்கணக் கூறுகளை விளக்கமுயலும் நோக்கியல் பகுதி, புதிய இலக்கணத்தின் தேவையையும் அதை நிறைவு செய்யும் இந்நூலையும் தாங்கி நிற்பதாகும்.

ஒலியனியல் என்ற பிரிவில் தமிழொலி அமைப்பும் புதிய வரவுகளும் சுட்டப்பட்டு எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. மொழி முதல் வராது, வரும் என்ற மரபின் நீட்சியாக சகர ஒலியனும் டகர ஒலியனும் விளக்கப்பட்டுள்ளன. ஒலிப்பிலா ஒலியாகவும் ஒலிப்புடை ஒலியாகவும் சகரம் ஒலிக்கப்படுவது மரபுச் செய்தியென்றாலும், மொழிமுதல் வரும் சகரமும் (சந்தி, சங்கம், சுமை), இடையினத்துக்கும் உயிரெழுத்துக்கும் இடையில் வரும் சகரமும் (வல்சி) உரசொலியாக ஒலிக்கப்படுகின்றன என்ற குறிப்பு புதிய தெளிவாகும். மேலும் அம்சம், இம்சை முதலான பிறமொழிச் சொற்களில் மகரத்தின் பின்னால் வரும் சகரம் உரசொலியாகவே ஒலிக்கப்படும் என்பது புதிய வரவாகும் (5;) குறிப்பு: நூல் குறிப்பிடப்பெறாமல், வெறும் எண்மட்டும் குறிப்பிடப்பெற்றுள்ளவை, 'இக்காலத் தமிழ் இலக்கணம்' என்ற நூலின் பக்க எண்களாகும்)

மொழிமுதலில் வரும் டகரம் (டாக்டர், டார்வின், டிக்கட்டு) பெரும்பாலும் பிறமொழிச் சொற்களிலேயே அமைந்துள்ளன என்ற குறிப்பு, டகரத்தை மொழி முதலாக ஏற்க வேண்டும் என்கிறது. "செந்தமிழ் மொழியின் சிதைவு வழக்கில் நாம் மொழிமுதல் டகரத்தைக் காணமுடியும். டேய் என்பதில் மொழிமுதல் டகரம் ஒலிப்புடை ஒலியாக அமைந்துள்ளது" (6) என்பது புதிய வரவாகும்.

'ஒலியன்கள் தோன்றும் வருகைமுறை', 'மெய்யெழுத்துகளின் வருகைமுறை', 'மெய் ஒலியன் இணைகள்', 'மூன்று மெய் இணைகள்' ஆகியவற்றிற்கான பட்டியல் விளக்கம் (8–14) பொதுவாசகனுக்கும் புரியக்கூடிய தன்மையில் அமைந்துள்ளது.

"பொதுவாகத் தமிழ் மொழியில் ஒலியழுத்தத்தால் பொருள் வேறுபாடு நேருவது இல்லை என்றே சொல்லலாம்" எனக்குறிப்பிடும் பொற்கோ, **தொடரிசை** என்பதை நுட்பமாக விளக்கியுள்ளார். "வினாத் தொடர்களை ஒலிக்கும்போது ஏற்படுகிற தொடரிசைக்கும், செய்தித் தொடரை ஒலிக்கும்போது ஏற்படுகிற தொடரிசைக்கும் வேறுபாடு இருப்பதாகக்" குறிப்பிட்டுள்ளார். "அவர் வந்தாரா? அவர் என் ஆசிரியர். அவர் இங்கு வரவில்லையே!" என்ற மூன்று தொடர்களை எடுத்துக்காட்டி முதலில் உள்ள வினாத் தொடரில் தொடரிசை கீழிருந்து மேலே எழும்புவதாகவும் அடுத்த தொடரில் தொடரிசையின் தொடக்கமும் இறுதியும் ஒரே நிலையில் அமைந்துள்ளதாகவும் மூன்றாவது தொடரில் தொடர் ஒலிக்கத் தொடங்கியபோது இருந்த நிலையிலிருந்து தொடரை முடிக்கும்போது தொடரிசை

வீழ்ச்சியடைந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். இவற்றிற்கு எழுச்சிநிலை, சமநிலை, வீழ்ச்சிநிலை எனப் பெயர்சுட்டியிருப்பது புதிய வரவு. (15–16)

தமிழ் ஒலியன் அமைப்பில் துணையமைப்பு என்னும் உட் தலைப்பில் "மேற்கூறிய ஒலியன்களோடு தமிழ்மொழியில் ஜ்,ஸ், ஷ், ஹ், க்ஷ ஆகிய ஒலியன்களும் இடம்பெற்றுவிட்டன" (18) எனக் கூறியிருப்பது ஓர் இலக்கண ஆசிரியனுக்கே உரிய கல்வி நேர்மையையும் புறவயத்தன்மையையும் காட்டுகிறது.

எல்லா இலக்கண நூல்களும் விளக்கும் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை, இடைச்சொல் ஆகிய சொல்வகைகளை இந்த நூலும் விளக்குகிறது என்றாலும் மரபிலக்கணங்கள் சொல்லாத பல்வேறு கூறுகள் இந்நூலில் புதிதாகக் கூறப்பட்டுள்ளன.

அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை முதலான சுட்டுப்பெயர்களைக் கொண்டு பதில்மாற்றம் செய்யக்கூடிய எல்லாப் பெயர்களையும் ஆறாக வகைப்படுத்தி அவற்றை முறையே ஆண்பால், பெண்பால், **உயர்பால்**, பலர்பால், ஒன்றன்பால் எனப் பெயரிட்டு வழங்குகிறார் இலக்கணி பொற்கோ. அவ்வாறே யார் என்ற வினாப் பெயரால் பதில்மாற்றம் செய்யத்தக்க எல்லாப் பெயர்களையும் 'உயர்திணை' என்றும், என்ன என்ற சொல்லால் பதில்மாற்றம் செய்யத்தக்கனவற்றை அஃறிணை என்றும் வகைப்படுத்துவது புதிய வரவாகும். இவற்றுள் உயர்பால் என்ற பகுப்பு இலக்கணியின் பங்களிப்பாகும்.

அவர்கள் என்ற சொல் 'தலைவர் அவர்களே' என்ற நிலையில் ஒருமையில் வரும் உயர்பால் என்பதை நூலாசிரியர் அறிவார். "அவர்கள் என்பது ஒரு பெயருக்குப் பின்னால் விகுதிபோல வரும்போது ஒருமையில் வர வாய்ப்புண்டு. ஆனால் அவர்கள் என்ற சொல் தனிச்சொல்லாக, எழுவாயாக வரும்போது அது பலர்பாலாகவே இருக்கும்" (பொற்கோ 1994 : 83) என்ற நுட்பத்தை அறிந்தவராதலால் இலக்கண வரையறையில் 'உயர்பால்'–அவர்–என்பது பற்றி மட்டும் விளக்கிச் செல்கிறார். இந்நூல் தமிழ் இலக்கணங்கள் பற்றிய ஆராய்ச்சி நூலன்று; இன்றைய தமிழின் அமைப்பை விளக்கும் முதனூல் வகையைச் சார்ந்த இலக்கணம் ஆகும். மொழியின் கட்டமைப்பையும் இயங்குதிறனையும் விளக்கும் விளக்கமுறை இலக்கணம் அல்லது இயன்மொழி இலக்கணம் (பொற்கோ 1994 : 5) ஆகும்.

பெயர், வினை, பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை, இடைச்சொற்கள் ஆகிய இவையாவும் தனிச்சொல்லாகவும் இருக்கலாம்; கூட்டுச் சொல்லாகவும் இருக்கலாம் என்ற வரையறையை மிக நீண்ட விளக்கத்துடனும் எடுத்துக்காட்டுகளுடனும் (28–37) உருவாக்கியுள்ளார் பொற்கோ. இக்காலத் தமிழில் வழங்கும் இடைச்சொற்கள் பற்றிய வரையறை

"1. தனிச்சொல் போலப் பயன்படுகிற கிளவிகள்

2. தனிச் சொல் போலத் தோன்றினாலும் விகுதி போலவே பயன்படுவன

3. மிதவை ஒட்டுகள்

4. விகுதிகளாகப் பயன்படுவன"
   – முதலான விளக்கங்கள் (30–32)

புதிய பங்களிப்புகளாகும்

வினையைப் பொருத்தவரை வினைக்கூறுகள் (ASPECTS), வினைநோக்கு (MODALS) மற்றும் செயப்பாட்டுவினை ஆகியன பற்றிய வரையறுப்புகளும் விளக்கங்களும் குறிக்கத்தக்கன.

"அவர் நேற்று வந்தார்; அவர் நேற்று வந்துவிட்டார்; அவர் நேற்று வந்திருக்கிறார்; அவர் நேற்று வந்துதொலைந்தார்" என்ற தொடர்களை எடுத்துக் காட்டி வா, வந்துவிடு, வந்திரு, வந்துதொலை முதலியன பதிலீடு செய்யத்தக்கன அல்ல என்றும், வருதல் என்ற ஒரே வினை, நிகழ்ச்சியில் உள்ள நுட்பமான கூறுபாடுகள் இவையென்றும் விளக்கம் அளிக்கப்பெறுகிறது. வினைக்கூறு, வினைநோக்கு, வினைப்பாங்கு (VOICE) என்ற மூன்று நிலையிலும் இடம்பெறும் துணைவினைகள் – "தனக்கென்று தனி வினைநிகழ்ச்சி இல்லாமல் வேறு ஒரு வினைநிகழ்ச்சியின் கூறுபாடுகளை உணர்த்துவதற்காகப் பயன்படுகிற வினைகள் துணைவினைகள்" – சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. (53)

கொண்டிரு (வந்து கொண்டிருந்தார்) – தொடர்நிலை; இரு (வந்திருந்தார்) – நிறைநிலை; விடு (வந்துவிட்டார்) – உறுதிநிலை; பார் (எழுதிப் பார்த்தார்) – சோதிப்புநிலை; காட்டு (படித்துக் காட்டினார்) – உணர்த்துநிலை; கொள் (வாங்கிக் கொண்டார்) – தன்வசநிலை; கொள் (அடித்துக் கொண்டார்) – பரிமாற்ற நிலை; போ (தொலைந்து போயிற்று) – தற்செயல்நிலை; தொலை (வந்து

தொலைத்தார்) – வெறுப்புநிலை; வை (வாங்கி வைத்தார்) – காப்புநிலை; அருள் (வழங்கியருளினார்) – வழங்குநிலை; வா (ஆண்டு வந்தார்) – வழக்க நிலை – எனத் துணைவினைகளின் முதன்மையான பொருளின் அடிப்படையில் வினைக் கூறுகளுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. வினைக்கூறுகளில் இடம்பெறும் எல்லாத் துணைவினைகளும் செய்தென்னும் எச்சத்தின்பின் வந்திருக்கின்றன. ஆனால் வினைநோக்குத் துணை வினைகள் செயவென்னும் எச்சத்தின் பின்னால் வருவன.

எழுதிப்பார்த்தாள், படித்துப் பார்த்தான் முதலானவற்றில் சோதனைக்குறிப்புடன் இடம்பெறும் 'பார்' என்பதும் ஓடப்பார்த்தான், தப்பிக்கப்பார்த்தான் முதலானவற்றில் உள்ள முயற்சிக்குறிப்புடன் இடம்பெறும் 'பார்' என்பதும் முறையே செய்தென், செயவென் எச்சமாகி வேறுவேறு பொருளில் வருவன என்பது பொற்கோவின் விளக்கமாகும். (54–66)

செய்வினை, செயப்பாட்டு வினையைப் பற்றித் தன் முந்தைய நூல்களில் விவாதித்துக் குறிப்பாகச் செயப்பாட்டு வினை தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் இடம்பெற்றுள்ள தமிழ் இலக்கண மரபைச் சார்ந்ததே; அது ஆங்கிய மரபின் செல்வாக்கால் வந்தது அல்ல (பொற்கோ 1996 : 11–12) என விளக்கியுள்ள நூலாசிரியர், "செயவென் எச்சமும் படு என்ற துணைவினையும் சேர்ந்து செயப்பாட்டு வினைத்தொடரை உருவாக்க உதவுகிறது" (63) என இலக்கணப் படுத்துகிறார்.

கூட்டுநிலை வினையெச்சங்கள் என்ற தலைப்பில் புதிய வினையெச்ச வாய்பாடுகளை உருவாக்கி வரையறுத்துள்ளமை இந்த இலக்கணத்தின் பெருங்கொடையாகும்.

செய்யாவிட்டால், செய்திருக்க, செய்துகொண்டு, செய்துவிட்டு, செய்திருந்தால், செய்யாமலிருக்க, செய்யாமலிருந்து, செய்யாமலிருந்தால்,செய்யாமற்போனதும், செய்யாமலிருக்கையில், செய்யாமல் இருந்திருக்க செய்யாமலிருந்துகொண்டு, செய்யாமலிருந்துவிட்டு, செய்யாமலிருந்திருந்தால் முதலிய வாய்பாட்டு வினையெச்சங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட எடுத்துக்காட்டுகளுடன் இலக்கணப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறே போது, பின், முன், உடன், படி, வரை, தோறும் ஆகிய 'ஈற்றுக் கூட்டுவினையெச்சங்கள்' புதியனவாக விளக்கப்பட்டுள்ளன (83–93).

தமிழில் உள்ள ஓர், ஒரு என்பவற்றை ஆங்கிலத்திலுள்ள an, a - என்பவற்றுடன் முறையே ஒப்பவைத்து விளக்கும் போக்கை மறுத்தும், இன்றைய தமிழில் ஓர், ஒரு என்பன பழந்தமிழ்ப் பொருளில் வழங்கவில்லை என்றும் ஏற்கனவே விரிவாக ஆய்ந்து எழுதியுள்ள பேராசிரியர் (பொற்கோ 1996 : 57–59), தன் இலக்கண நூலுள் இதை 'இன்றைய இலக்கிய வழக்கில் ஒரு என்பது மட்டுமே இயல்பாகப் பெயரடையாகப் பயன்பட்டுவருகிறது; ஓர் என்ற பெயரடை வலிந்து புகுத்தப்பட்ட பெயரடையாகத் தோன்றுகிறது' (106) என விதிப்படுத்தியுள்ளார்.

இடைச் சொற்களைப் பற்றிய விரிவான விளக்கங்கள் இந்த நூல் தமிழுக்கு அளித்துள்ள பங்களிப்புகளாகும். ஆ, ஏ, அல்லவா முதலான உரையாடல் குறிப்பான்களும் அடா, அடி, உங்க முதலான விளிசார் ஒட்டுகளும், டேய், அடேய், ஏல, இந்தாடா, இந்தாங்க முதலான விளிப்புக் கிளவிகளும், ஐயோ, அம்மா, ஐயையோ முதலான உணர்ச்சிவெடிப்புக் கிளவிகளும், போது, உடன், முன், பின் எனவரும் வினைசார் ஒட்டுகளும், ஆனால், ஏனென்றால், இருந்தபோதிலும், இருந்தாலும் முதலான இணைப்பிடைச்சொற்களும் இடைச்சொல் என்னும் இலக்கணப் பகுப்பில் அடங்குவன என்பார் இலக்கணி பொற்கோ.

> "ஆமாம் என உடன்பாட்டுக் குறிப்பில் வரும் கிளவியும் இல்லை என எதிர்மறைக் குறிப்பில் வரும் கிளவியும் சரி என இசைவுக் குறிப்பில் வரும் கிளவியும் மாட்டேன் என மறுப்புக் குறிப்பில் வரும் கிளவியும் இடைச்சொற்களாகவே கொள்ளத்தக்கன ... சிலருடைய உடையாடலில் வந்து, அப்புறம் முதலான கிளவிகள் அடிக்கடிப் பொருளற்ற நிலையில் பயன்படக்காண்கிறோம்... இத்தகைய நிரப்பிகளும் ஒருவகை இடைச்சொற்களே. தமக்கென்று அகராதிப் பொருள் இல்லாதனவாக மொழி உலகில் செயல்பாட்டுக் கிளவிகளாக வருவன எல்லாம் இடைச்சொற்கள் என்றே கொள்ளப்படும்." (121–122)

பேராசிரியர் பொற்கோ மொழியியல் புலமைசால் இலக்கணி என்பதை இந்த நூலின் 'தொடரியல்' பகுதி தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. நூலின் சிறப்புகளை முற்றாக விளக்கிக் காட்டுவது என்பது நூலை மறுபிரதி எடுத்துக் காட்டும் பணி என்பதால் ஒரு சில நுட்ப விளக்கங்கள் மட்டுமே பறவைப் பார்வையில் இங்கே விளக்கப்படுகின்றன.

முற்றுத்தொடர்கள், 1) செய்தித் தொடர் (கண்ணன் நேற்றுக் காலையில் இங்கு வந்தான்), 2. வினாத்தொடர் (கண்ணன் எப்போது இங்கு வந்தான்), 3) ஆணைத்தொடர் (எழுந்து நில்), 4) உணர்ச்சி வெடிப்புத்தொடர் (என்ன கொடுமை) – என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தொடரியல் நோக்கில் தனித்தொடர், எச்சஞ்சார் தொடர், இணைப்புத் தொடர், இரட்டைத்தொடர் என வேறு ஒரு வகைப்பாடும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குத் தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் 'இதுவே இக்காலத் தமிழிலக்கண நூல்' என்பதை எண்பிப்பன (165–169).

"நல்ல மனிதன் மற்றவர்களைப் புரிந்துகொள்ள முயலுவான்" என்ற முற்றுத்தொடரை இந்த நூல் விளக்கிக் காட்டும் விதம் வியக்கத்தக்கது.

நல்ல மனிதன்–பெயரெச்சத் தொடர்; மற்றவர்களைப் புரிந்துகொள்ள முயலுவான்–வினைத்தொடர்; மற்றவர்களைப் புரிந்துகொள்ள – வினையெச்சத் தொடர்; நல்ல மனிதன் – நல்ல என்பது பெயரெச்சம் மனிதன் என்பது பெயர்; மற்றவர்களை – வேற்றுமை ஏற்ற பெயர்; புரிந்துகொள்ள – கூட்டு வினையெச்சம்; முயலுவான் – தனி வினைமுற்று ... இவ்வாறாக மேற்கண்ட முற்றுத் தொடரை விளக்கிக்காட்டி, இதனடிப்படையில் தொடர்களை (175–176)

1) பெயர்த்தொடர்
2) வினைத்தொடர்
2) பெயரெச்சத்தொடர்
4) வினையெச்சத்தொடர்
5) பெயரடைத் தொடர்
6) வினையடைத்தொடர்
7) விளித்தொடர்
8) வியப்புத்தொடர்
9) இணைப்புக் கிளவித் தொடர்
10) தொடர்சார் முதல்நிலைக் கிளவித் தொடர்
11) தொடர்சார் இடைநிலைக் கிளவித் தொடர்
12) தொடர்சார் கடைநிலைக் கிளவித் தொடர்

எனப் பன்னிரண்டு வகையாகப் பிரித்துக் காட்டி, ஏராளமான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது இந்த நூல். முற்றுத் தொடர்களின் முற்றிய விளக்க நூலாக 'இக்காலத் தமிழ் இலக்கணம்' இலங்குகிறது.

சந்தி பற்றிய பேராசிரியரின் தொடர் ஆய்வுகளின் (பொற்கோ 1996 : 74–94; 1996 அ.) பிழிவாகச் சந்தி இலக்கணப் பகுதி அமைந்துள்ளது.

# III

'இக்காலத் தமிழ் இலக்கணம்' என்னும் காலஞ்சார் இயன்மொழி இலக்கணமான இந்நூலின் பெருஞ்சிறப்பு அல்லது அரும்பெரும் பங்களிப்பு "நோக்கியல் பகுதி -REFERENCE SECTION" என்னும் இரண்டாவது பகுதியாகும். இந்தப் பகுதியே இக்காலத் தமிழிலக்கணம் என்னும் தலைப்பை அரண்செய்யும் அணிசெய்யும் பகுதியாகும். இன்றைய நடப்புத் தமிழில் தோன்றிப் பெருவழக்கில் ஆளப்பெற்றுவரும் எல்லாப் புதுப்புது வழக்குகளையும் சொல்லாட்சிகளையும் கூறுகளையும் இலக்கணப் படுத்த முயல்கிறது; இடர்ப்படும் இடங்களில் கல்வி நேர்மையுடன் 'இவற்றை இன்னும் ஆழமாகக் கவனிக்க வேண்டும்' என்கிறது; 'அடா' என்ற சொல்முதல் 'வேற்றுமை மயக்கம்' வரை ஏறக்குறைய இருநூற்று ஐம்பத்தேழு புதிய இலக்கணக் கூறுகளை – இன்றைய தமிழில் பெருவழக்காய் இருக்கும் சொல்லாட்சிகளை அகரவரிசையில் நிரல்படுத்தி விளக்குகிறது.

போகலாம், படிக்கலாம் என்பதிலுள்ள அலாம்; வருவாராக்கும், தெரியுமாக்கும் என்பதிலுள்ள ஆக்கும்; அவராவது இங்கு வருவதாவது என்பதிலுள்ள ஆவது – இப்படி எண்ணற்ற புதிய மொழிக் கூறுகளை இந்நூல் விளக்கமுயல்கிறது. நாம் எந்தக் கவனமும் கொள்ளாமல் மிக இயல்பாகப் பேசும் பல்வேறு வகையான புதிய வழக்குகளுக்கு இலக்கணம் கூறுகிறது.

"<u>யாரும் எதுவும்</u> சொல்லத் தேவையில்லை / <u>ஒருவரும் ஒன்றும்</u> சொல்லத் தேவையில்லை" என்ற இரண்டு வழக்குகளை மிகச்சாதாரணமாக ஆளுகிறோம். ஆனால் இவற்றுள் முன்னதே இயல்பானது, பின்னது சற்றுத் தயக்கத்திற்குரிய தொடர் என்கிறார் ஆசிரியர். இதை ஆழமாகப் புரியவைக்க வேண்டி "யாரும் எதுவும் பேசலாம் என்று நினைத்துக் கொண்டிருக்காதீர்கள் / ஒருவரும் ஒன்றும் பேசலாமென்று நினைத்துக் கொண்டிருக்காதீர்கள்" என்ற தொடர்களைக் கூடுதல் எடுத்துக் காட்டுகளாகத் தந்துள்ளார்கள் **(331)**. இப்படி எண்ணற்ற விளக்கங்கள் வியப்படைய வைக்கின்றன. அவற்றுள் ஒரு சில:

**1)** அவனல்ல, அவளல்ல என்பனவற்றிலுள்ள 'அல்ல' பயன்பாடு சரியானதே! அவர் அல்லர், அவள் அல்லள் என்பனவே சரியென்றால் 'அவர்கள் அல்லர்கள்' என்ற ஒருவினையை ஏற்க வேண்டும். வேறு, இல்லை, உண்டு முதலான குறிப்பு வினைகள் போல அல்ல என்பதும் ஐம்பால் மூவிடப் பொதுவினையாக ஆகியிருக்கிறது **(264)**.

2) ‘இராமனாவது கண்ணனாவது வந்தான்’ என்பதிலுள்ள ஆவது, ‘அவராவது இங்கு வருவதாவது’ என்பதிலிருந்து வேறுபட்டது. பின்னது ‘அவர் நிச்சயம் வரமாட்டார்’ என்ற பொருள் அழுத்தம் உடையது (273).

3) என்னிடம், அவரிடம், உங்களிடம் முதலான கிளவிகளில் வரும் ‘இடம்’ என்பதனை வேற்றுமை விகுதியாகவும் பின்னுருபாகவும் கொள்ள இடம் இருக்கிறது. தகுந்த வாதங்களை வைத்து முடிவுசெய்ய வேண்டும் (277).

4) சொல்லுங்கள், நடவுங்கள், செல்லுங்கள் முதலானவற்றில் ‘உங்கள்’ என்பது விகுதியாகும். மரபிலக்கணங்கள் இப்படியொரு, விதியைக் கூறவில்லை என்றாலும் இக்கால மொழிநிலையில் உங்கள் விகுதி என்பதே பொருத்தம் (287).

5) மொழி+அரசி = மொழியரசி, பூ+அரசு = பூவரசு என்பனவற்றுள் உடம்படுமெய்கள் தவிர்க்க இயலாதன. ஆனால் தொடர்களில் வரும் சொற்களுக்கு இடையில் உடம்படுமெய் அவசியம் இல்லை: தமிழ்மொழி என்பது ஒரு தொன்மை வாய்ந்த மொழி. தாமரைப் பூ எனக்கு மிகவும் பிடிக்கும் (288).

6) அறிவியல் தமிழ், மக்கள் தொகை என்பன முறையே அறிவியற்றமிழ், மக்கட்டொகை என ஆகவில்லை. கல்–கற்றான், கேள்–கேட்டான், கல்+தூண் = கற்றூண் எனத் தனிச் சொல்லிலும் தொகையிலும் இந்தச் சந்தியை நாம் பார்க்கிறோம். ஆனால் ‘அவர் ஊரில்தான் இருக்கிறார்’ என்பது ஊரிற்றான் இருக்கிறார் எனத் தொடர்களில் மாறுவதே இல்லை. (290).

7) ‘எழுப்ப எழுப்ப அவன் விழிக்கமாட்டேன் என்கிறான்’ என்ற தொடரில் ‘விழிக்கமாட்டேன்’ என்பது அவன் சொன்ன சொல் அல்ல. விழிக்கவில்லை என்பதையே ‘விழிக்கமாட்டேன் என்கிறான்’ எனச் சொல்கிறோம். இந்தப் பூட்டுத் திறக்க மாட்டேன் என்கிறது, இந்தப் பேனா எழுதமாட்டேன் என்கிறது முதலான தொடர்களில் ‘ஏன்’ என்பது புதுமையான முறையில் ஆளப்பட்டுள்ளது. (315).

8) கொண்டு என்ற சொல்தான் ‘கிட்டு’ என்று மாறிற்று என உறுதியாகக் கூற முடியாது. எடுத்துக்கொண்டு – எடுத்துக்கிட்டு, வாங்கிக்கொண்டு– வாங்கிக்கிட்டு என்பன சரியே! ஆனால் அவன் கொண்டுவந்தான் என்பது அவன் கொண்டுகிட்டு வந்தான் என மாறுகிறது. கிட்டு என்பதற்கு நிகராகக் கொண்டு என்பதைக் கொண்டால் ‘கொண்டு கிட்டுவந்தான்’ என்பதற்கான இலக்கியத்

தொடராக 'கொண்டு கொண்டு வந்தான்' என அமைய வேண்டும். ஆனால் அப்படி அமைவதில்லை (335–336).

9) படு என்ற துணைவினை அமையும் இடமெல்லாம் செயப்பாட்டுவினைத்தொடர் எனக் கருத முடியாது. 'பரிசு வழங்கப்பட்டது' செயப்பாட்டுவினை. ஆனால் 'அடிபட்டான்' செயப்பாட்டுவினை அல்ல. வழங்கப்பட்டது, வழங்கப்பெற்றது எனப் படுவும் பெறுவும் பதிலீடுகளாக உள்ளன. ஆனால் பெறு என்ற துணைவினை வருகிற எல்லா இடங்களும் செயப்பாட்டு வினைகள் அல்ல: புத்தகங்கள் வரப்பெற்றேன் (373).

10) வினாச் சொல்லின் வகைப்பாடுகள்:

யார் (கண்ணன், வளவன்), என்ன (ஆடு, மாடு), எவன் (கண்ணன், வளவன்), எவள் (அரசி), எவர் (ஆசிரியர்), எவர்கள் (மாணவர்கள்), எது (ஆடு), எவை (ஆடுகள்), எந்த (அந்த, படித்த), *எத்தனை (அவ்வளவு, இரண்டுகிலோ), எப்படிப்பட்ட (நல்ல), எப்படி* (அப்படி, மெல்ல), எங்கு (அங்கு, கிழக்கே), என்று (அன்று, முப்பதாம் தேதி), எப்போது(அப்போது), எத்தனாவது (இரண்டாவது), எத்தனாம் (இருபதாம்), என்னசெய் (ஓடு), எப்படி (கருப்பு, மோசம்), ஏன் (போக, படிப்பதற்காக), ஏது (வாங்கினது) (399–402).

நோக்கியல் பகுதியில் ஏறக்குறைய 257 புதிய கூறுகள் விளக்கப்பட்டுள்ளன என முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஒரு சோறு பதம்' பார்க்கப் போதுமானது என்பது அனைவரும் அறிந்தது, இலக்கணி பொற்கோவோ 257 பானைகளில் தமிழ்ப் புதுச்சொற்கூறுகளைச் சோறாக்கியுள்ளார். இக்கட்டுரையில் வெறும் 10 பருக்கைகளே பருண்மையாகக் காட்டப்பட்டுள்ளன. சொல்நிலை, தொடர்நிலை, உருபுநிலை, விகுதிநிலை, உடம்படுமெய், சந்தி, புதைபொருள் நிலை, பதிலீடுநிலை, *துணைவினை நிலை மற்றும் வினாச்சொல் நிலை என மனங்கவர்* வகையாகப் பத்துநிலைகளில் தமிழின் புதிய வரவுகளை இலக்கணப்படுத்தும் 'இக்காலத் தமிழ் இலக்கண'த்தின் நோக்கியல் பகுதி மேற்கண்டவாறு தொட்டுக் காட்டப்பட்டுள்ளது.

"ஏறக்குறைய நாற்பதாண்டுக் காலமாக மொழியுலகில் கற்றும் கற்பித்தும் ஆராய்ந்தும் கலந்துரையாடியும் எனக்குக் கிடைத்த அறிவின் பெரும்பகுதியை எளிமைப்படுத்தி இனிமை சேர்த்து இந்த நூலில் வழங்கியிருக்கிறேன்"(vi-vii)

–பேராசிரியர் பொற்கோவின் இலக்கணக் கட்டுரைகளை, ஒருபொருள் குறிப்புநூல்களை, இலக்கண ஆய்வுகளைத் தொடர்ந்து படித்துவருபவர்களுக்கு மேற்கண்ட அவர் கூற்றின் ஆழமும் அறிவின் வியர்வையும் புரியும். இலக்கண உலகில் புதிய பார்வை என்னும் தொகுதிகளும், இலக்கணக் கலைக்களஞ்சியம், தமிழிலக்கணக் கோட்பாடுகள், செந்தமிழ் முதலான நூல்களும், Modern studies in Tamil, Studies in Tamil Linguistics, Linguistic studies in Tamil முதலான கட்டுரைத் தொகுப்பு ஆங்கில நூல்களும் நாற்பதாண்டுக் காலமாக அவர் இலக்கண உலகில் பதித்துவந்த சுவடுகளுள் பளிச்செனப் புலப்படும் ஒருசில மைல்கல் சுவடுகளாகும்.

"வேறு எந்த நூலிலும் கிடைக்காத அரிய செய்திகள் இந்த நூலில் கிடைக்கும் என்பது உறுதி"(vii)- என்ற அவர் அறிவு நம்பிக்கையை மெய்ப்பிப்பதாகவே இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

"மேலும் பல இலக்கண நூல்கள் தோன்றவும் தமிழ் இலக்கண உலகின் ஆய்வு எல்லையை விரிவாக்கவும் இந்த நூல் ஊன்று கோலாகவும் தூண்டுகோலாகவும் நின்று உதவும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை"(vii) என்ற அவர் விழைவு வெற்றிபெறும் எனக் கூறும் வகையில் இக்கட்டுரைக்குப் 'பொற்காப்பியம் அல்லது பொன்னூல்' எனத் தலைப்பிடப்பட்டிருக்கிறது.

## IV

> "ஆறுமுகம் என்பதிலிருந்து ஆறுமுகன் என்ற பெயரும் காரணம் என்பதிலிருந்து காரணன் என்ற பெயரும் முக்குணம் என்ற பெயரிலிருந்து முக்குணன் என்ற பெயரும் உருவாகியிருக்கின்றன... இதைப் போலவே தொல்காப்பியம் என்ற பெயரிலிருந்துதான் தொல்காப்பியன் என்ற பெயர் உருவாகி இருக்க வேண்டும்" (1994:11) என்கிறார் பொற்கோ.

உண்மையே! தமிழ்மொழி மரபிலும் வழக்கிலும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதால்தான் இந்தப் பொற்காப்பியம் அல்லது பொன்னூல் உருவாகி இருக்கிறது. இன்றைய தமிழில் நூலுக்குப் பெயரிடும் முறையில் நேர் எதிர் மாற்றம் உருவாகி இருக்கிறது. எனக் கொள்வோம். பொற்கோ படைத்துள்ள புத்தமிழ் இலக்கணம்

பொற்காப்பியம் எனப் பெயர்பெற்றிருக்கிறது; பொன் என்பதிலிருந்தே பொன்னூலும் தோன்றியிருக்கிறது. கால ஓட்டத்தில் ஏதேனும் ஒரு பெயர் நிலைக்கும்.

இந்தக் கட்டுரையில் நூலாசிரியர், பேராசிரியர், பொற்கோ, இலக்கணி எனப் பல பெயரில் ஆசிரியர் சுட்டப்பட்டுள்ளார். இனி வரலாற்றில் இலக்கணி, நூலாசிரியர், பேராசிரியர், பொற்கோ, பொற்காப்பியனார், பொன்னூலார் என்பன ஒரு பொருள் சுட்டும் நீர்மையனவாய்த் திகழ்வன.

தொல்காப்பியம் என்ற பெயர் நமக்கு வழங்கும் செய்தி என்ன என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையும் கூறியுள்ளார் ஆசிரியர். "தொன்மையைக் காக்கின்ற நூல் என்ற பொருளில் தொல்காப்பியம் என்ற பெயர் வந்திருக்க வேண்டும். மொழியின் தனித் தன்மைகளையும் மரபுகளையும் காக்கின்ற இந்த நூலுக்குத் தொல்காப்பியம் என்ற பெயர் அமைந்தது என்பது மிகவும் பொருத்தமே" (1994:11) என்பது அவர் கூற்று. உண்மைதான்!

இன்றைய தமிழ், தமிழ்ப் பகைவர்களால் அல்ல, தமிழர்களாலேயே சீரழிக்கப்பட்டு வருகிறது. நுனிநாக்கில் ஆங்கிலம் பேசுவதுபோல் தமிழைப் பேசும் கல்லூரியர் ஒருபுறம். டாமில் எனக்கு வர்ராது எனக் குதப்பும் சிறார்களைக் கண்டு மகிழும் பெற்றோர் ஒருபுறம். தமிழ்க் கொலையையும் பால்மொழி வழக்குகளையுமே தர்மமாகக் கொண்டிருக்கும் எழுத்து ஊடகங்கள் மறுபுறம். எல்லா விழுமியங்களையும் பணமாக்கப் பார்க்கும் பெருங்குழும வணிகர்களிடையே சிக்கி இருக்கிறதே மின் ஊடகங்கள், அவையே நாம் கடுமையாக எதிர்க்க வேண்டிய இழிபுரம்! இந்தச் சூழலில்தான் இன்றைய பழகு தமிழைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் பண்பாட்டு அடையாளமாகச் செழிக்கச் செய்யவும் தோன்றியுள்ள இந்த நூலுக்குப் பொற்காப்பியம் அல்லது பொன்னூல் எனப் பெயர் அமைப்பது மிகவும் பொருத்தமே.

<u>காணிக்கை</u>: சென்னை, மாநிலக் கல்லூரியில் 1968–1973 வரை இளங்கலை மற்றும் முதுகலையில் தமிழ் படித்தபோது இலக்கணமும் மொழியியலும் கற்பித்த பேராசிரியை இராசலட்சுமி அம்மையார் அவர்கட்கு இக்கட்டுரையைக் காணிக்கையாக்குகிறேன்.

<u>நூலடைவு</u> (இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள,

குறிப்பிடப்பெற்றுள்ள பேராசிரியர் பொற்கோவின் நூல்கள்):

1) 1972 Studies in Tamil Linguistics
Chennai : Tamil Nulagam.

2) 1974 செந்தமிழ்
சென்னை: தமிழ் நூலகம்

3) 1976 Modern studies in Tamil
Chennai : Tamil Nulagam.

4) 1980 Linguistic Studies in Tamil
Chennai : Tamil Nulagam

5) 1989 தமிழிலக்கணக் கோட்பாடுகள்
சென்னை: தமிழ்நூலகம்

6) 1994 தொல்காப்பிய அறிமுகம்
சென்னை: வானதி பதிப்பகம்

7) 1996 இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி–3
சென்னை: பூம்பொழில் வெளியீடு

8) 1996அ தமிழில் நீங்களும் தவறில்லாமல் எழுதலாம் (முதற்பதிப்பு 1992)
சென்னை: புதுவாழ்வுப் பதிப்பகம்

9) 1997 இலக்கணக் கலைக்களஞ்சியம் (முதற்பதிப்பு 1985)
சென்னை: பூம்பொழில் வெளியீடு

10) 2002 இக்காலத் தமிழ் இலக்கணம்
சென்னை: பூம்பொழில் வெளியீடு

# சில்லுக்கருப்பட்டியும் இலக்கண விளக்க மரபும்

முனைவர் இரா. கோதண்டராமன்
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்
புதுச்சேரி

சில்லுக்கருப்பட்டி என்ற தொடர் கல்கியில் சில இதழ்களில் மட்டுமே வெளிவந்தது. தமிழின் தீவினைப்பயன், தாமரை மணாளன் காலமானதைத் தொடர்ந்து இந்தத் தொடர் முற்றுப்பெறாமலே போயிற்று.

1. கல்கி 13–04–2003 தேதியிட்ட இணைப்பிதழில் தாமரை *மணாளனின் சில்லுக்கருப்பட்டி* என்ற தொடரின் முதல் பகுதி தொடங்கியுள்ளது. இந்தத் தொடரில் வழங்கும் சில மொழி வழக்குகள் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டினை வெளிப்படுத்தும் வட்டார மொழிக்கு உரியவையாகும். மானுடம் பயன்படுத்தும் கருவிகளனைத்தும் திரிபியல் கோட்பாட்டுக்கு உட்பட்டவையாகும். இந்தக் கருவிகளுள் மொழியும் அடங்கும். திரிபு என்பது மாற்றமேயன்றித் தேய்மானமல்ல. தாமரை மணாளனின் *சில்லுக்கருப்பட்டித்* தொடரின் முதல் பகுதியில் இடம்பெற்றுள்ள வட்டார மொழி வழக்குகள் சில தொகுக்கப்பட்டுக் கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

1) பயிரிப் பயிரி (= பதறிப் பதறி) (ப.72)

2) நீ சாப்பிடு. நான் பயினியைக் குடிக்கேன் (= பதனியைக் குடிக்கிறேன்) (ப.74)

3) வீட்ல... மயினி ( = மதனி) சௌக்கியமா ? (ப.75)

இந்த மூன்று எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் பயிரி, பயினி, மயினி ஆகியவற்றில் காணப்படும் யகரம் இரண்டு உயிர்களுக்கு இடையில் நிகழும் தகரத்தின் திரியாகும். இந்தத் திரிபினை த்>ய்/ உ–எனக் குறிப்பிடலாம். இந்த விதியில் உ என்பது உயிரெழுத்தைக் குறிக்கும். தகரம் இரண்டு உயிர்களுக்கு இடையில் நிகழும் என்பதை உ–உ என்ற குறிப்பானது உணர்த்துகிறது. த்>ய் / உ–உ என்ற விதியானது பேசும் இலக்கியம் அதாவது மொழியைப் பயன்படுத்தும் மானுடம் நமக்குத் தந்ததாகும். விதியை உருவாக்கிக் கொண்டு மொழி நிகழ்வதில்லை. மொழியின் நிகழ்ச்சியில் ஏற்படும் திரிபுகள் விதிகளை இனங்காணத்

துணைபுரிகின்றன. அவ்வளவுதான். இங்கே மொழி இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற பண்டிதக் கட்டளைக்கு இடமில்லை. இனி, தகரம் உயிர்களுக்கு இடையில் யகரமாகத் திரிவதைத் தொடர்ந்து நிகழும் மாற்றங்களைக் காண்போம்.

4 (அ) பதறி > பயறி > பயரி

(ஆ) பதனி > பயனி

(இ) மதனி > மயனி

இந்த மாற்றங்களைத் தொடர்ந்து யகரத்தை அடுத்து அகரம் யகரத்தின் இன உயிராகிய இகரமாகத் திரிகிறது.

5 (அ) பயரி > பயிரி

(ஆ) பயனி > பயினி

(இ) மயனி > மயினி

ஒரு மாற்று ஆய்வையும் இங்கே குறிப்பிடலாம். இதன்படி யகரம் ஊர்ந்த அகரம் கெட்டு பய்ரி, பய்னி, மய்னி ஆகிய வடிவங்கள் தோற்றம் கொள்கின்றன. இந்த வடிவங்களும் ஏற்புடைய வழக்குகளே. யகரத்தைத் தொடர்ந்து ரகரம் மயங்குவதால் இதனைத் தவிர்க்கும் வகையில் யகரத்தின் இன உயிராகிய இகரம் அதனையடுத்தும் ரகரத்தின் முன்னும் நிகழ்ந்து பயிரி, பயினி, மயினி ஆகிய வடிவங்கள் தோன்றியமைகின்றன.

2. பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் தொல்காப்பியம் ஆய்வுக்கு இசைந்த (எழுத்து, இளம். 284) உம்மென் சாரியையின் நிகழ்ச்சியையும் மெல்லொற்றுப் பேற்றினையும் காணலாம்.

(6) ...பனங் காட்டை நோக்கி நடந்தாள் (ப.74)

(7) நீங்க எல்லாரும் *விளங்காட்டுக்கு* வந்திருக்கீங்கன்னு சொன்னாங்க (ப.75)

இந்த இரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் *பனங்காடு, விளங்காடு* ஆகியவற்றின் நிலைமொழிகள் *பனை, விளை* என்பனவாகும். வருமொழியாகிய இவற்றில் நிகழும் ஐகாரம் அய் என்பதன் வரிவடிவக் குறியீடாகும். எனவே இவைகளை முறையே *பனய், விளய்* என்றும் எழுதலாம். காடு் என்னும் வருமொழியின்முன் இவை நிகழ்கையில் மகர எழுத்துப் பேற்றினை ஏற்று *பனய்–*

*ம்+காடு, விளய்–ம்+காடு* என அமைகின்றன. *காடு* என்பதில் நிகழும் ககர மெய்யின் தாக்கத்தால் மகர எழுத்துப்பேறு ககரத்தின் இனமெல்லொலியாக மாறுகின்றது. இதனைத் தொடர்ந்து *பனய்ங்காடு, விளய்ங்காடு* என்ற வடிவங்கள் தோன்றியமைகின்றன. தமிழ் எழுத்தியலானது *–ய்ங்–* என்ற மெய்ம்மயக்கத்தை அதாவது மெல்லொற்றின் முன் யகரத்தின் நிகழ்ச்சியைச் சில சூழல்களில் ஏற்பதில்லை. சொல்லின் ஒலிப்பை அல்லது மொழியின் இயக்கத்தை எளிமைப்படுத்தும் வகையில் மேற்படி எடுத்துக்காட்டுக்களில் நிகழும் –ய்ங்– என்ற மெய்ம்மயக்கத்தில் காணப்படும் யகர மெய் தவிர்க்கப்படுகிறது. இதன் விளைவாக *பனங்காடு, விளங்காடு* ஆகிய தொடர்கள் தோற்றங் கொள்கின்றன.

3.தொல்காப்பிய ஆய்வின்படி (எழுத்து. இளம். 284) பனங்காய் என்ற தொடரில் நிலைமொழியாக நிகழும் *பனை (= பனய்)* என்பதன் ஈற்றில் உள்ள ஐகாரம் கெட்டு அந்த இடத்தில் அம் சாரியை இடம் பெற்று, அதில் நிகழும் மகரம் ஙகரமாகத் திரிந்தமையும். இதனைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(8) பனை+காய் > பன்–அம்+காய் > பனங்காய்

*பனை* என்பதன் மாற்றுருபாகப் *பன்* என்பதைச் சுட்டும் இந்த ஆய்வு நாம் மேலே நிகழ்த்திய ஆய்வினின்றும் மாறுபட்டதாகும். இந்த ஆய்வின்படி *தென்னை, தாழை, ஈச்சை, துவரை, புடலை* முதலானவை அம் சாரியை முன் முறையே *தென், தாழ், ஈச், துவர், புடல்* முதலான மாற்றுருபுகளைக் கொண்டனவாகக் கருதப்படும். இத்தகைய ஆய்வானது சொல்லின் இயல்பான வடிவங்களுக்குப் பொருந்தாத செயற்கையான மாற்றுருபுகளை மொழியில் திணித்து அதன் கட்டமைப்பினைச் சிதைத்து விடுகின்றது.

4. மேலே பனங்காய் இருவகையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஒரே இலக்கை நோக்கிய இரண்டு மாறுபட்ட ஆய்வுகளில் எதனைச் சிறந்த ஆய்வாகக் கருதுவது? எழுத்தியல் ஆய்வில் அகநிறைவுத் தன்மையதாகிய (Internal Adequacy) ஆய்வு மரபு, புறநிறைவுத் தன்மையதாகிய (External Adequacy) ஆய்வு மரபு என்று இரண்டு வகையான ஆய்வு மரபுகள் உள்ளன. இவைகளுள் அகநிறைவு ஆய்வு மரபானது இலக்கு, அதனை அடையும் நெறி ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டதாகும். புறநிறைவு ஆய்வு மரபானது நெறியைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. இலக்கை எப்படியாவது அடைவதுதான்

அதன் குறிக்கோள். இந்த இரண்டு வகையான ஆய்வு மரபுகளில் அகநிறைவுத் தன்மையதாகிய ஆய்வு மரபே சிறந்த ஒன்றாக மதிப்பீடு செய்யப்படும். ஏனெனில் இந்த ஆய்வு மரபானது தொன்றுதொட்டு வரும் மொழியின் படிநிலை போக்கிலான அமைப்பியல்பைச் சிதைக்காமல் அதில் காணப்படும் உள்ளார்ந்த ஒழுங்கமைதிகளை விளக்குவதாகும். புறநிறைவுத் தன்மையதாகிய ஆய்வு மரபானது இலக்கை அடைய தொன்றுதொட்டுப் போற்றப்பட்டுவரும் மொழியின் அமைப்பியல்பினைச் சிதைக்கவும் தயங்குவதில்லை. இதனால் மொழியில் காணப்படும் உள்ளார்ந்த ஒழுங்கமைதிகள் புலப்படாமல் போகின்றன. தொல்காப்பிய ஆய்வு மரபு பெரும்பாலும் புறநிறைவுத் தன்மையதாகும். *பனங்காய்* ஆய்வில் பனை என்பதன் ஐகாரத்தைக் கெடுக்கும் தொல்காப்பிய முயற்சி பனைக்கொடி என்ற தொடரின் ஆய்வில் (எழுத்து. இளம். 286) எடுபடாமற் போகிறது. இங்கு ஐகாரத்தைக் கெடுக்க முடியாமல் அதனையடுத்து வல்லொற்றுப் பேறு நிகழும் என்று கூறிச் செல்கிறார் தொல்காப்பியர். பனங்காய், பனைக்கொடி இரண்டையும் ஒரு நேரிய கோட்பாட்டின் கீழ் அகநிறைவுத் தன்மையதாகிய ஆய்வு உட்படுத்தும். இரண்டிலும் மகரப்பேறு நிகழும்; இரண்டிலும் மகரப்பேறு இனமெல்லொற்றாக நிகழும். காய் என்பதில் ககரம் அலையொலியாகத் திரிவதால் *பனை (=பனய்)* என்பதில் உள்ள யகரம் கெடுகிறது. கொடி என்பதில் நிகழும் ககரமெய் நிலையொலியாக அமைவதால் பனய் என்பதில் உள்ள யகரம் கெடாமல் நிலைகொள்வதுடன் அதனையடுத்து நிகழும் நகர வல்லொற்று நிலையொலியாகிய ககர வல்லொற்றின் முன் இனவல்லொற்றாகத் திரிகிறது. இந்த மாறுபட்ட நிகழ்ச்சிகள் மொழி வளர்ச்சியின் இருவகைப்பட்ட படிநிலைகளின் வெளிப்பாடுகளாகும்.

5. *விளங்காய், களங்கனி* ஆகியவற்றில் நிலைமொழியை அகரவீற்றுப் பெயர்களாக அதாவது *விள, கள* எனக் கொள்வார் தொல்காப்பியர் (எழுத்து. இளம். 204). இவை *விளா, களா* எனவும் தமிழில் வழங்குகின்றன. *களா* என்பது கன்னடத்தில் *களவெ, களிவி* என்றும் தெலுங்கில் *கலிவி, கலிவெ* என்றும் (DED 1161) வழங்குகின்றன. தமிழில் *களவு, விளவு* என்ற சொற்களும் வழக்கில் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு *கள, விள* ஆகியவற்றின் தொல் வடிவங்களை **களய் (=களை), *விளய் (=விளை)* என மீட்டுருவாக்கம் செய்யலாம். அசையழுத்தம் (Syllabic Stress) குன்றிய நிலையில் ஈற்று யகரத்தை இழந்து இவை *விள, கள* என உருமாறி இருக்க வேண்டும். அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சிகளில் இவற்றையடுத்து மகரப்பேறு நிகழ்கின்றது. இதன்

விளைவாக *விள–ம்+குறிது (அல்வழி), **விள–ம்+காய்* என்ற தொடர்கள் அடிநிலை அமைப்புகளாகக் காய்க்கு என்ற வினைப்பகுதியின் அடியாகவும் கொள்ளப்படுகின்றன. இருவகைப் புணர்ச்சிகளிலும் மகரப்பேறு இனவல்லொற்றாகத் திரிந்து **விளங்+குறிது*, **விளங்+காய்* என்ற அமைப்புகள் தோன்றியமைகின்றன. வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி ககரமெய் அதன் முன் நிகழும் மெல்லொலியின் தாக்கத்தால் நிலையொலித் தன்மையை இழந்து அலையொலியாகத் திரிகிறது. இதன் விளைவாக *விளங்காய்* என்ற தொடர் தோற்றம் கொள்கிறது. ஆனால் அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி ககரமெய் நிலையொலித் தன்மையை இழக்காமையால் அதன்முன் நிகழும் இனமெல்லொற்று இனவல்லொற்றாகத் திரிகிறது. இதன் விளைவாக *விளக்குறிது* என்ற தொடர் தோற்றம் கொள்கிறது. வல்லொலி மெல்லொலிகளின் திரிபுகளை அல்வழிப் புணர்ச்சியும், வேற்றுமைப் புணர்ச்சியும் கட்டுப்படுத்துவதை இந்த ஆய்வில் காணலாம்.

6. மாறுபட்ட வினையமைப்புகளின் நிகழ்ச்சிகளைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

(9) அம்மா... பதனீர் காய்க்க பனைவிளைக்குப் போயிருக்கிறாள் (ப.72)

(10) வேலையாட்களை வைத்துப் பதனீர் காய்த்த காலம் இப்போது மாறியாச்சு (ப.73)

(11) எம் பொஞ்சாதியை ஓங்க ஒத்தாசைக்கு வரச் சொல்லுதன் (ப.75)

எடுத்துக்காட்டுகள் (9)–இல் நிகழும் *காய்க்க* என்பது *காய்ச்ச* என்னும் எதிர்வெச்ச வினையோடும், (10)–இல் நிகழும் *காய்த்த* என்பது *காய்ச்சிய* என்ற இறந்தகாலப் பெயரெச்ச வினையோடும் பொருந்துவனவாகும். *காய்க்க* என்னும் எதிர்வெச்சம் *காய்க்கு* என்ற வினைப்பகுதியின் அடியாகவும், *காய்த்த* என்னும் பெயரெச்சம் *காய்ம் என்ற வினைப்பகுதியின் அடியாகவும் அமைந்தவையாகும். *காய்க்கு, காய்ம்* ஆகியவை வண்ணனை ஆய்வில் *காய் (=காய்ச்சு)* என்பதன் மாற்றுருபுகளாகும். காய்க்கு என்பது அகரவிகுதியின் முன்பும், *காய்ம்* என்பது தகர விகுதியின் முன்பும், *காய்* பிற சூழலிலும் நிகழ்வனவாகும். பெயரெச்ச விகுதியாகிய அகரத்தின் முன் நிகழும் *காய்த்து* என்ற இறந்தகால வினையின் தோற்றம் **காய்ம்(–)த் > காய்ந்–த்>காய்த்த்* என்ற திரிபுகளைத் தொடர்ந்து அமையும்.

7. காய்க்கு, காய்ச்சு ஆகியவை இருவேறு கிளைமொழிகளில் நிகழ்பவையாகும். இவற்றுள் செவ்வியல் வழக்கில் நிகழும் *காய்ச்சு* என்பது *காய்க்கு* என்பதன் திரிபாகும். இந்தத் திரிபினைப் பின்வருமாறு புலப்படுத்தலாம்.

12 (அ) காய்க்கு>காய்க்க்யு (யகரம் பிரதியாக்கம்)

(ஆ) காய்க்க்யு>காய்ச்ச்யு (க்க்>ச்ச/–ய்)

(இ) காய்ச்ச்யு>காய்ச்சு (ய்>/ச்ச்–)

குமரி மாவட்டக் கிளைமொழிகளில் (12)–இல் குறிக்கப்பெற்றுள்ள எழுத்தியல் மாற்றங்களுக்குச் சான்றுகள் உள்ளன. (பார்க்க கோதண்டராமன், இரா. 2002. இறவாக்காலப் பொது வினைமுற்றுக்கள், தமிழியல் ஆய்வு இன்றைய போக்குகள் (பதிப்பர்: அருள்ராஜ் வே. சா. முதலியோர்), தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்).

8. *காய்க்க (=காய்ச்ச), காய்த்து (=காய்ச்சி)* ஆகிய வினைத்திரிபுகளைக் கருத்தில் கொண்டு *காய்* (=காய்ச்சு) என்பதன் அடியாகத் தோன்றியமையும் சிறப்பு வினைமுற்றுக்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம். காலப்பகுதி+இயைபு விகுதி என்ற அமைப்பில் முற்றுவினைத் திரிபுகள் கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

இறப்பு

(13) காய்த்த்+ஏன்/ஓம்/ஆய்/ஈர்கள்/ஆன்/ஆள்/ஆர்/ஆர்கள்/அது/அன

நிகழ்வு–1:

(14) காய்க்க்+ஏன்/ஓம்/ஆய்/ஈர்கள்/ஆன்/ஆள்/ஆர்/ஆர்கள் (குமரி வழக்கு)

நிகழ்வு–2:

(15) காய்க்க்–இன்ற்+ஏன்/ஓம்/ஆய்/ஈர்கள்/ஆன்/ஆள்/ஆர்/ஆர்கள்/அது/அன (செவ்வியல் வழக்கு)

எதிர்வு:

(16) காய்ப்ப் + ஏன்/ஓம்/ஆய்/ஈர்கள்/ஆன்/ஆள்/ஆர்/ஆர்கள்

*காய்ச்சுகிறது* என்ற நிகழ்கால ஒன்றன்பால் வினைமுற்றும் காய்ச்சும் என்ற எதிர்கால வினைமுற்றும் குமரி வழக்கில் முறையே *காய்க்கு, காய்க்கும்* என அமையும். *காய்க்க, காய்க்கும்* ஆகியவற்றில் *காய்க்கு* என்பது வினைப்பகுதியாக இனங்காணப்படுகையில் பழந்தமிழில் உள்ளதுபோல் எதிர்கால வினைமுற்றுக்கள் பின்வருமாறு அமையும்.

(17) காய்க்கு–வ்+என்/அம்/ஐ/இர்/அன்/அள்/அர்/அது/அன

எடுத்துக்காட்டு (17)–இல் குறிக்கப்பெற்றுள்ள வினைப்பகுதியாகிய *காய்க்கு* என்பது இறந்தகால வினைப்பிரிவில் நிகழ்வதில்லை. பழந்தமிழில் இந்த மரபு பயின்று வழங்குகிறது.

9. *சில்லுக்கருப்பட்டித்* தொடரில் நிகழ்கால வினைகளில் ஒருவகை தகர விகுதியைக் கால இடைநிலையாகக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டு (11)–இல் நிகழும் சொல்லுதன் என்பது நிகழ்காலத் தன்மை ஒருமை வினைமுற்றாகும். இந்த வினைமுற்றில் நிகழும் தகரம் நிகழ்கால விகுதியாகும். இந்த விகுதி பொதுப்பேச்சுத் தமிழில் ரகரமாகத் திரிந்து மிகைத் திருத்தம் (Hyper Correction) செய்யப்பெற்று *சொல்லுறன் (<சொல்லுரன்)* என வழங்குகிறது. *சொல்லுற (<சொல்லுர)* என்ற பெயரெச்சம் குமரி வழக்கில் நிகழும் சொல்லுத என்ற நிகழ்காலப் பெயரெச்சத்தின் திரிபாகும். சொல்லுறது என்பது சொல்லுதது என்ற குமரி வழக்கின் திரிபாகும்.

10. பெயரெச்சத் தொடரில் பெயரெச்ச வினையையடுத்து நிகழும் தலைமைப் பெயர் இடம் பெயர்ந்து எழுவாய் நிகழும் இடத்தில் நிலைகொள்வதையும் இதன் விளைவாகப் பெயரெச்சம் வினையாலணையும் பெயர் எனக் கருதப்படும் சிறப்பு வினைமுற்றாகத் திரிந்தமைவதையும் பின்வரும் எடுத்துக்காட்டில் காணலாம்.

(18) [நான் ஒரு ஜோலியா உடன்குடிக்குப் போனவன்] நேரா இங்கே வந்துட்டேன்(ப.75)

பகர அடைப்புக்குள் இருக்கும் *நான் ஒரு ஜோலியா உடன்குடிக்குப் போனவன்* என்ற பெயரெச்சத் தொடர் *ஒரு ஜோலியா உடன் குடிக்குப் போன நான்* என்பதன் திரிபாகும். இதில் தலைமைப் பெயராக நிகழும் ஆண்பால் கூறுக்குரிய *நான்* என்னும் தலைமைப் பெயர் எழுவாய் நிகழும் இடத்துக்கு நகர்ந்து நிலை கொண்டதைத்

தொடர்ந்து போன என்ற பெயரெச்சம் போனவன் என்று மாறியமைகின்றது. போனவன் என்பது போனவ்+அன் என்ற அமைப்பினதாகும். போனவ் என்பது போன என்பதன் மாற்றுருபாகும். அன் என்பது நான் என்பதன் ஆண்பால் விளக்கமாகும். நான் என்பது பெண்பாலாக இருந்தால் அள் என்ற விகுதியின் நிகழ்ச்சி இடம் பெறும். நான் என்ற தன்மை ஒருமைப் பெயரின் விகுதி போனவன் என்பதில் இடம்பெறவில்லை. போனவனேன் என்று அமையவேண்டிய வினை போனவன் என்றஅளவோடு நின்றுவிட்டது. காரணம் நான் என்ற தன்மை ஒருமை எழுவாய், இந்த உண்மையை உணர்த்திவிடுகிறது. இதனால்தான் நான் ஏழையேன் என்று அமைய வேண்டிய வாக்கியம் நான் ஏழை என்று அமைகிறது.

11. தாமரை மணாளனின் இன்னொரு வகையான நிகழ்கால வினையின் நிகழ்ச்சியும் சில்லுக்கருப்பட்டித் தொடரில் காணப்படுகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டைக் கருதுக.

(19) நான் நம்ம பனைப் பயினியை குடிக்கேன் (பக். 74)

இந்த எடுத்துக்காட்டில் நிகழும் குடிக்கேன் என்பது குடிம் என்ற வினைப்பகுதியின் அடியாகத் தோன்றியதாகும். ககரம் நிகழ்கால விகுதியாகும். இயைபு விகுதியாகிய ஏன் என்பதன் முன் நிகழும் குடிக்க் என்னும் காலப் பகுதி (Tense Base) குடிம்+க் >குடிங்–க் >குடிக்க் என்ற முறையில் தோன்றியமையும். *குடிம் என்ற வினைப்பகுதியானது குடி என்பதன் மாற்றுருபாகும். குடிக்கேன் என்பது இடைக்காலத் தமிழில் எதிர்கால வினைமுற்றாக நிகழ்ந்து இக்காலச் செவ்வியல் தமிழில் வழக்கற்றுப்போய்விட்டது.

---

## செந்தமிழ்க் கல்லூரி - புதிய செயலாளர்



இரா. குருசாமி அவர்கள்

செந்தமிழ்க் கல்லூரியின் புதிய செயலராக மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் **உயர்திரு. இரா. குருசாமி** பி.ஏ., அவர்கள் **03.07.06** முதல் பதவியேற்றுள்ளார் என்பது பேருவகையுடன் தெரியப்படுத்தப்படுகிறது. இவர் முன்னாள் தமிழ்ச் சங்கச் செயலாளரும், தமிழ்ச் சட்டமன்ற உறுப்பினருமான தெய்வத்திரு **கோச்சடை டி.பி.எம். பெரியசாமி** அவர்களின் மைத்துனர் ஆவார்.

---

# வரைபடச் செய்யுள்

திரு. மு.குப்புசாமி, சென்னை

செய்யுள் ஓவியம் (சித்திர கவி) நாற்புறப் பிணையல் (சதுரங்கபந்தம்)

–கட்டளைக் கலித்துறை–

பாடல் எழுத்து 78 ஒவிய எழுத்து 64

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 64 ச | 65 ற | 66 நா | 67 மெ | 68 து | 69 செ | 70 ய் | 71 து |
| 63 கே | 2 62 ங் | 61 லி | 60 னே | 59 ல | 58 கி | 57 மை | 56 ம |
| 48 ழ | 49 க் | 3 50 கா | 51 ட் | 52 டி | 53 78 ய | 54 போ | 55 து |
| 47 ரெ | 46 ட | 45 சு | 4 44 ர் | 43 74 கோ | 42 ங் | 41 ன | 40 ரா |
| 32 த் | 33 தெ | 34 ழு | 35 75 மா | 5 36 நெ | 37 றி | 38 யு | 39 ண |
| 31 ர் | 30 மா | 29 76 லு | 28 ணி | 27 கா | 6 26 டு | 25 சு | 24 ன் |
| 16 சி | 17 77 றி | 18 து | 19 மெ | 20 ணா | 21 ணெ | 7 22 ங் | 23 கோ |
| 15 78 னே | 14 வ | 13 ல | 12 மா | 11 ரு | 10 தி | 9 த் | 8 கை |

*எழுத்து வரிசை – 1 முதல் 78 வரை எழுத்துக்களை 1,2,3,4,....... என்ற வரிசையில் படிக்கும் போது கட்டளைக் கலித் துறைப்பா உண்டாவது காணலாம்.*

*"சங்கார் நெடுங்கைத் திருமா லவனே சிறிதுமெணா*
*ணெங்கோன் சுடுகா ணிலுமார்த் தெழுமா நெறியுணரா*
*னங்கோர் சுடரெழக் காட்டிய போது மமைகிலனே*
*லிங்கே சறநா மெதுசெய்து மையகோ மாலுநினே."*

**M.K.S.**

*பதிப்பாசிரியர்*

**பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்**

## ஆசிரியர் குழு

*முனைவர். திரு. தமிழண்ணல்*

*பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்*

*டாக்டர் திரு. ந. சேதுராமன்*

*முனைவர். திரு. சுப. அண்ணாமலை*

*முனைவர். திரு. ம.ரா.போ. குருசாமி*

*முனைவர். திரு. அ.அ.மணவாளன்*

*முனைவர் கதிர் மகாதேவன்*

*முனைவர் நா. பாலுசாமி*

*முனைவர் பெ. சுயம்பு*

*முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி*

*இராசா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி*

*முனைவர். திரு. செ. கந்தசாமி*

*முனைவர். திரு. க. சின்னப்பா*

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. © 2532879.
ஆசை அச்சகம், மதுரை. © 26 222 50, 98434 - 32484

# மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு மலருக்கு

## தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம் மற்றும் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் குறித்த கட்டுரைகள் அனுப்ப

**தொடர்பு முகவரி**

பதிப்பாசிரியர்,
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

முதல்வர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–1.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 1.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,